RE/MAX Realtron Blue Force — Team Blue Force
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
Direct 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 09 டிசம்பர் 2022 இதழ்:- 33

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances,
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

## முழுமையான இலங்கைக்கே இந்தியாவின் ஆதரவு, உதவி! அது தனித்து தமிழ்நல அணுகுமுறையல்ல என்கிறார் ஜெய்சங்கர்




பொருளாதார நெருக்கடியில் சிக்கிய நமது அயல் தேசமான இலங்கைக்கான இந்திய உதவி தனித்து தமிழ்நல அணுகுமுறையில் முன்னெடுக்கப்பட வில்லை. அது முழுமையான இலங்கைக்கான உதவி இவ்வாறு 07 டிசம்பர் 2022 புதுடில்லி யில் இந்திய ராஜய சபையில் உரையாற்றிய அந்நாட் டின் வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்தார்.(7ம் பக்கம் பார்க்க)

## கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அஜித் தொடுத்த அவதூறு வழக்கில் ஒன்ராறியோ உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சமூக ஊடகங்களில் அவதூறு பரப்புவோருக்கு படிப்பினை



கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத் முன்னாள் தலை வரும் சமூக செயற்பாட்டாளருமான திரு அஜித் சபா ரத்தினத்தின் மீது சமூக ஊடகங்களினூடாக அவதூறு தெரிவிக்கப்பட்டதற்கு எதிராக அவரினால் தொடுக்கப் பட்ட வழக்கில் ஒன்ராறியோ உயர் நீதிமன்றம் இரு வேறு திகதிகளில் கூடி அஜித் சபாரத்தினத்திற்கு நட்ட ஈடாக மொத்தத் தொகையாக 123,000 டொலர்கள் பின் வரும் அடிப்படையில் வழங்கும்படி உத்தரவிட்டுள் ளது. (3ம் பக்கம் பார்க்க)

## ரணில் தயாராவது சமாதானத்துக்கா?



இன நெருக்கடியை பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்க்கப் போவத ாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருக்கும் அதே வேளையில், மறு புறத்தில் (16ம் பக்கம் பார்க்க)

## சிவபெருமான் யாருடைய ஆள்? ஆறு.திருமுருகனிடம் இராணுவம் கேட்ட கேள்வி!

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
Mortgage Alliance

THINKING OF
# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




18 Years Real Estate Experience


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


**Lawrence / Morningside**

Scarborough $499,800
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route


**Dixie & Clark**

Brampton $539,900
Bedrooms: 3 Washrooms: 2
Beautiful Corner Unit! Upgraded

**Sheppard & Warden**

Scarborough $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony


**Mccowan/Hwy 401**

Scarborough $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Suite, Laminate Fl


**Eglinton & Mccowan**

Scarborough $620,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Location Location Location!!!

**Yonge St & Finch Ave**

Toronto $698,000
Bedrooms: 2 Washrooms: 2
Steps To Yrt, Go Bus.

**Eglinton/Markham**

Scarborough $839,000
Bedrooms: 3 Washrooms: 2
Renovated W/O To the Balcony

**Simcoe & Ritson**

Oshawa $850,000
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors

**Simco St N/ Darcy**

Oshawa $1,298,000
Bedrooms: 3+1 Washrooms: 4
Updated Open Concept Kitchen

**Markham & Major Mackenzie**

Markham $1,649,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx 3,450 Of Living Space

**Keele/Sheppard**

Toronto $855,000
Bedrooms: 3 Washrooms: 2
*Investment Property*!

**401 & Mccowan Rd**



Scarborough $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Location! Location! Location!

**Bellamy & Lawrence**


Scarborough $2,850
Bedrooms: 3 Washrooms: 2
$$$ Spent On Upgrades

**Mclevin & Neilson**


Scarborough $2,600
Bedrooms: 2 Washrooms: 2
Renovated Brand New Kitchen

**Markham & Denison**


Markham $2,300
Bedrooms: 1+1 Washrooms: 1
Upgraded & Maintained Like New

**Thickson & Burns**


Whitby $2,250
Bedrooms: 3 Washrooms: 3
Close To 401 Exit And Go Train

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அஜித் சபாரெத்தினம் தொடுத்த அவதூறு வழக்கில் ஒன்ராறியோ உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சமூக ஊடகங்களில் அவதூறு பரப்புவோருக்கு படிப்பினை

கனடா தமிழர் வர்த்தக சம்மேளனத் முன்னாள் தலைவரும் சமூக செயற்பாட் டாளருமான திரு அஜித் சபாரத்தினத் தின் மீது சமூக ஊடகங்களினூடாக அவதூறு தெரிவிக்கப்பட்டதற்கு எதி ராக அவரினால் தொடுக்கப்பட்ட வழக் கில் ஒன்ராறியோ உயர் நீதிமன்றம் இரு வேறு திகதிகளில் கூடி அஜித் சபாரத் தினத்திற்கு நட்டஈடாக மொத்தத் தொகையாக 123.000 டொலர்கள் பின் வரும் அடிப்படையில் வழங்கும்படி உத்தரவிட்டுள்ளது .

2022 ஆகஸ்ட் 18 அன்றைய திகதியின் படி பொது நட்டஈடாக 75.000 டொலர்களும் மற்றும் தண்டனையாக வும் முன் மாதிரியாக மற்றவர்கள் இவ் வாறான செயல்களைச் செய்வதனைத் தடுக்கும் முகமாக விதிக்கப்பட்ட தண் டப் பணம் 25.000 டொலர்கள் 2022 நவம்பர் 22 அன்றைய திகதியின்படி வாதியான அஜித் சபாரத்தினத்திற்கு கணபதிப்பிள்ளை யோகநாதன் **MK Tamil**



**2137534 Ontario Corp k PARAII Media Group m PARAII.Com** பிரதி வாதிகளும் பகுதியான நட்டஈடாக டொலர்கள் 23.000 வாதிக்குக் கொடுக் கும்படி உயர் நீதிமன்ற நீதிபதி உத்தர விட்டுள்ளார். இவை யாவும் 30 நாட்களுக்குள் கொடுக்கப்பட வேண்டும் என்று நீதிபதியினால் கையொப்பமிடப் பட்டுள்ளது. மேலதிக நீதிமன்ற நிபந்த னைகளையும் உத்தரவுகளையும் கீழே தரப்பட்டுள்ள நீதிமன்றக் கோவை இலக் கத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் .

**Translation of the key elements of the Superior Court Judge's endorsement**

**Citation :Sabaratnam V Mooka ,2022 ONSC 4779**

**Court File No :CV -19-00633610-0000**
**Date: 2022 August 18**

**Citation :Sabaratnam V Mooka ,2022 ONSC 6552**

**Court File No :CV -19-00633610-0000**
**Date: 2022 November 22**

சமூக நலன்களில் அக்கறையும் அவ தானிப்பும் கொண்ட பலர் இத் தீர்ப்பை வரவேற்றுள்ளனர். சமூக ஊடகங்களில் தான்தோன்றித்தனமாக எழுதி தமது வக்கிர புத்தியைக் காட்டிக் கொள்வோ ருக்கு சிறந்ததொரு படிப்பினையை வழங்கியுள்ள திரு அஜித் அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

# தமிழ்த் தரப்பினருடனான சந்திப்புக்கு ஜனாதிபதியிடம் இருந்து இன்னும் அழைப்பு வரவில்லை

தமிழ் கட்சிகளுடனான பேச்சுவார்த்தை க்கு தாம் தயார் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் அறி வித்த போதிலும் இதுவரை தமக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப் படவில்லை என தமிழ் தேசியக் கட்சி களின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

வரவு செலவுத் திட்டத்திற்கு பின்னர் தமிழ் கட்சிகளுடன் பேசுவதற்கு தயார் என வரவு செலவுத் திட்ட விவாதத் தின் போது ஜனாதிபதி தெரிவித்திரு ந்தார். எனினும், இந்த கலந்துரை யாடல் தொடர்பில் ஜனாதிபதியிடம் இருந்து தமக்கு இதுவரை எவ்வித உத்தியோகபூர்வ அழைப்பும் வர வில்லை என தமிழ் தேசிய கூட்டமை ப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரி வித்தார்.

கலந்துரையாடலுக்கான திகதியை ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக அறி விக்கும் பட்சத்தில், தங்களுக்குள் கலந்துரையாடி அடுத்த கட்ட செயற்



பாடுகளை முன்னெடுக்க முடியும் என தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரி வித்தார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பேச்சு வார்த்தைக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும், உத்தியோகபூர்வமாக எவ் வித அழைப்பும் இதுவரை விடுக்கப் படவில்லை என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணே சன் குறிப்பிட்டார்.

# இலங்கையில் பெற்றோர்கள் போதைக்கு அடிமையானதால் 12,000க்கும் அதிகமான குழந்தைகள் அனாதை இல்லங்களில்

12.000 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் தற்போது அனாதை இல்லங்களில் கைவிடப்படுகின்றனர், ஏனெனில் அவர்களின் பெற்றோர்கள் போதைப்பொருளுக்கு அடிமை யானவர்கள் என்று லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை ஆலோ சகர் குழந்தை நல மருத்துவர் டாக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். மேலும் பெற்றோர்கள் போதைக்கு அடிமையானவர்கள் என்பதால் பெரும்பாலான குழந்தைகள் தங்கள் பாட்டி அல்லது தாத்தாவுடன் மருத்துவமனை களுக்கு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் பயங்கரவாதத்தை விட பாடசாலை மாணவர்களி டையே போதைப்பொருள் தொடர்பான அனைத்து பழக்கங் களும் மிகவும் ஆபத்தானது . இந்த சூழ்நிலைக்கு எதிராக மக்கள் அனைத்து பிரசாரங்களையும் தொடங்க வேண்டும்.

**ICE** எனும் போதைப்பொருள் பாடசாலை மாணவர்களிடை யேயும் இளம் பராயத்தினர் மத்தியிலும் வேகமாக பரவி வருகிறது. மாணவர் சமுதாயத்தினரிடையே போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. மாணவர்களை போதைக்கு அடிமையாக்குவது தற்போதைய சூழ்நிலையில் ஒரு ட்ரெண்டிங்காக மாறியுள் ளது. இன்றைய நாட்களில் பாடசாலை மாணவ மாணவி களை பிக் மேட்ச்கள் மூலம் பீர் குடிக்க வைப்பது அதிக ரித்துள்ளது. இறுதியில் அவர்கள் ஏதோ ஒரு வகையில் போதைக்கு அடிமையாகி விட்டனர். அவர்களில் சிலர் ஐஸ் பாவனையை நோக்கி தள்ளப்பட்டுள்ளனர். எந்தவொரு போதைப்பொருளின் ஒரு முறை உபயோகித்தாலும் சிறுவர் கள் நிரந்தரமாக அடிமையாகி விடுகிறார்கள்.''

போதைப்பொருள் வியாபாரிகளுக்கு எதிராக கிராமங்களில் இருந்து அனைத்து பிரசாரங்களும் போராட்டங்களும் தொடங்கப்பட வேண்டும். இந்த போதைப்பொருள் அச்சுறு த்தல் மேலும் பரவினால், (7ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# இலங்கையின் கடன் சுமைக்குத் தீர்வைக் காண்பதற்கான கூட்டு முயற்சிகளுக்கு சீனா அழைப்பு!



இலங்கையின் கடன்சுமைக்கு தீர்வை காண்பதற்கான கூட்டு முயற்சிகளிற்கு சீனா அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கை போன்ற நாடுகளின் கடன் தறு சீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இந்த வாரம் சீனாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கையில் சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் இதனை தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்துடனும் ஏனைய நிதியமைப்புகளுடனும் சீனாவிற்கு நீண்ட கால நல்லுறவு உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் நெருக்கடிகள் சவால்களிற்கு சீனா மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இந்த விவகாரத்திற்கு தீர்வை காண்பதற்கான வழி முறைகளை உருவாக்குவதற்கு நிதியமைப்புகளிற்கு நாங்கள் ஆதரவளிக்கின்றோம் என சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும் அதன் கடன் சுமையை குறைத்து பேண்தகு அபிவிருத்தியை சாத்தியமாக்குவதற்கும் உரிய சர்வதேச நிறுவனங்கள் சீனாவுடன் இணைந்து செயற்படும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு அமெரிக்கா உதவிகளை வழங்கும் என்று அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் உறுதியளித்துள்ளார். இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் சந்தித்த தருணத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பிளிங்கன் இந்த தகவலை வெளியிட்டார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இது தொடர்பான காணொளியை வெளியிட்டுள்ளது. தமது சந்திப்பின் போது, உலக காலநிலை விடயங்கள், அதில் இலங்கைக்கான திட்டங்கள் மற்றும் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியதாக பிளிங்கன் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் கருத்துரைத்த, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமெரிக்காவின் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடுகள், அதற்கான அமரிக்காவின் ஏற்பாடுகள் குறித்தும் அமைச்சர் அலி சப்ரி இலங்கை சார்பில் நன்றியை தெரிவித்தார்.

# சமஷ்டியை நிபந்தனையாக வைத்தால் தென்னிலங்கை கொந்தளிக்கும்

தமிழ்த் தரப்பின் சமஷ்டி நிபந்தனையால் தென்னிலங்கையில் எதிர்மறையான நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாக தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மக்கள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில் தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்த வடக்கு,கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான இனப்பிரச்சினைக்கு தீர்வு உள்ளிட்ட மூன்று விடயங்களை வெளிப்படுத்தியுள்ளன. இது குறித்து கருத்து வெளியிடும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்த அவர்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளர். இந்தப் பேச்சுவார்த்தையில், தமிழ்த் தரப்புக்கள பங்கேற்பது மிகவும் முக்கியமானது. ஆனால், பேச்சுவார்த்தை மேசையில் அமர்வதற்கு முன்னதாக, இணைந்த வட,கிழக்கு உட்பட சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்ற விடயத்தினை அத்தரப்பு பிரதானமாக முன் வைத்துள்ளது. இது, பேச்சுவார்த்தைகளுக்கான நல்லெண்ண சமிக்ஞை வெளிப்பாடுகளை பின்னடையச் செய்வதற்கான முயற்சியாகும். ஆகவே, தமிழ்த் தரப்பு இவ்வாறு பகிரங்கமான நிபந்தனைகளை விடுத்து, பேச்சுவார்த்தை மேசைக்குச் சென்று, அதன் பின்னர் சில விடயங்களை முன் வைக்க முடியும். அதில் மிக முக்கியமாக, மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துதல், 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தல், அதற்கு அடுத்த படியாக, இந்தயாவின் முறைமையை பின்பற்றி இறுதித் தீர்வினை காணுதல் உள்ளிட்ட படி நிலைமைகளில் செல்ல முடியும்.

ஏனென்றால், ஆரம்பத்திலேயே தென்னிலங்கைக்கு பலத்த சந்தேகத்தினை ஏற்படும் வகையில் தமிழ்த் தரப்பு நிபந்தனைகளை விதித்தால், அது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடுமையான அழுத்தங்களை ஏற்படுத்தும். அதே நேரத்தில் ஆட்சியில் உள்ள தரப்பினரும், ஆதரவினை விலக்குவதற்கான வாய்ப்புக்கள் இல்லாமில்லை. ஆகவே, பேச்சுக்களை ஆரம்பிக்கும் போது, கடுமையான விடயங்களை முன் வைப்பதான, ஏற்கனவே ஒற்றையாட்சி முறைமை என்றால் சந்தேகப்படும்,



தமிழர்களும், சமஷ்டி என்றால் தென்னிலங்கை சிங்களவர்களுக்கும் கடுமையான எதிர்ப்போக்கான நிலைமையே உள்ளது. எனவே, அவ்விதமான சூழல் உருவாகுவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

இதேவேளை தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான சர்வகட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களைத் தொடர்பு கொண்டு அந்தத் திகதியில் அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு பிரதமரை பணித்துள்ளார்.

றொரன்றோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா - அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

கனடா முத்துமாரியம்மன்

அங்கத்துவர்களுக்கான வருடாந்த மகாசபை கூட்டம்.

22ஜனவரி2023 ஞாயிற்றுக்கிழமை கனடா முத்துமாரியம்மன் கலாச்சார மண்டபத்தில் மாலை 2 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.அங்கத்தவர்கள் அனைவரும் மாதாந்த சந்தா பணத்தை செலுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

16 நவம்பர் 2022 புதன்கிழமை முதல் ஐயப்பன் மண்டல பூஜை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஐயப்ப படிகட்டுப் பூஜை செய்ய விரும்பும் பக்தர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

08 டிசம்பர் 2022 வியாழக்கிழமை:- விநாயகர் சஷ்டி விரதம் நடைபெறுகின்றது. பிள்ளையாருக்கு பூஜை செய்ய விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# அரசியல் சீர்திருத்தங்களும் அவசியம் - அமெரிக்கா

இலங்கையில் பொருளாதார சீர்திருத்தங்களுடன் அரசியல் சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என யுஎஸ்எயிட்டின் நிர்வாகி சமந்தா பவர் தெரிவித்துள்ளார். இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்தவேளை சமந்தா பவர் இதனை தெரிவித்துள்ளார் என யுஎஸ்எயிட் பேச்சாளர் ஜெசிகா ஜெனிங்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில் இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகள் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கான சீர்திருத்தங்கள் குறித்து ஆராயப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் மீட்சி வளர்ச்சிக்கு யுஎஸ்எயிட் எவ்வாறு உதவலாம் என்பது குறித்து இருவரும் ஆராய்ந்துள்ளனர்.

செப்டம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட சமந்தா பவர் இலங்கையின் மிகவும் நலிந்த நிலையில் உள்ளவர்கள் ஒதுக்கப்பட்ட சமூகங்களை சேர்ந்தவர்களின் அவசரதேவைகள் உட்பட இலங்கை எதிர்கொண்டுள்ள குழப்பமான நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு உதவுவதற்கான யுஎஸ்எயிட்டின் அர்ப்பணிப்பை வெளியிட்டுள்ளார்.



பொருளாதார சீர்திருத்தங்களுடன் அரசியல் சீர்திருத்தங்களையும் இணைந்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் சமந்தா பவர் வலியுறுத்தியுள்ளார்.

# இலங்கை விவகாரங்களுக்கு தீர்வு காண இந்தியாவுடன் இணைந்து செயற்படும் பிரிட்டன்



இலங்கை விவகாரங்களிற்கு தீர்வை காண்பதற்காக இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது. பிரித்தானியாவின் பிரபுக்கள் சபை இலங்கை நிலவரம் குறித்து ஆராய்ந்துள்ளது.

இதன்போது பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு இலங்கை குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளிற்கு பதிலளித்துள்ளார்.

இலங்கை விவகாரங்களிற்கு தீர்வை காண்பதற்காக இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது. பிரித்தானியாவின் பிரபுக்கள் சபை இலங்கை நிலவரம் குறித்து ஆராய்ந்துள்ளது. இதன் போது பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு இலங்கை குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளிற்கு பதிலளித்துள்ளார்.

இவர் இலங்கை விவகாரத்தில் இந்தியா ஆற்றிவரும் முக்கிய பங்களிப்பை சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் குறித்து பிரிட்டன் தொடர்ந்தும் கரிசனையுடன் கவனத்துடன் இருக்கும் என தெரிவித்துள்ள அவர் இலங்கை மனிதாபிமான விவகாரங்களை எதிர் கொள்வதற்கு பிரிட்டன் உதவும் எனவும் தெரிவித்துள்ளார்.

# புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் வழக்குகளில் விசேட கவனம் - நீதியமைச்சர் தகவல்

சிறையில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் வழக்குகளில் விசேட கவனம் செலுத்துமாறு பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். சட்டம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் தனிப்பட்ட முறையில் அவதானம் செலுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும முன் வைத்த கோரிக்கைக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

விடுதலை புலிகள் அமைப்புடுன் தொடர்புடையதாக குற்றச்சாட்டின் அடிப்படையில் 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் 400 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அப்போது நான் நீதியமைச்சராக பதவி வகித்த போது சிறைச்சாலைகளில் இருந்த விடுதலை புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் எண்ணிக்கை 110 ஆக குறைக்கப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தில் விடுதலை புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் வழக்குகளை துரிதப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய கொழும்பு மற்றும் அநுராதபுரத்தில் விசேட மேல நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வழக்கு எண்ணிக்கை 60 ஆக குறைக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் விடுதலை புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையில் 31 பேர் உள்ளார்கள் இவர்களில் 16 பேர் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையிலும் 15 பேர் சந்தேகத்தின் அடிப்படையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

சிறையில் உள்ள விடுதலை புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் வழக்குகளில் விசேட கவனம் செலுத்துமாறு பிரதம நீதியரசரிடம் கோரிக்கை



விடுத்துள்ளேன். சட்டம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட விடயங்களை பெற்றுக்கொண்டு, சுகாதாரத் துறை பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஒரு விசேட குழுவை அமைத்து சிறை கைதிகளின் வயது மற்றும் உடல்நிலை ஆகியவற்றை கருத்திற் கொண்டு ஜனாதிபதியின் அனுமதியுடன் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக சிறிலங்கா அதிபர் ரணில் விக்ரமசிங்க உண்மையான முயற்சிகளை எடுத்தால் மட்டுமே தமிழ் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்றத்தில் அறிவித்துள்ளது. இதற்கு மாறாக இவ்வாறான தீர்வுகள் வெறுமனே பூசி மெழுகுவதாக இருந்தால் அதற்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்காது எனவும் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் பலாலி, மட்டக்களப்பு விமான நிலையங்கள் மீதான வரி அகற்றப்பட்டால் உலகெங்கும் வாழும் தமிழர்கள் உல்லாசப் பயணிகளாக வெளிநாட்டு நாணயத்துடன் நாட்டுக்குள் வருவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இயலாமையின் வாக்குமூலம்?

பேச்சுவார்த்தைகள் எவையுமே வெற்றியளிக்கவில்லை. சிங்களக் குடியேற்றங்கள் வடக்கு கிழக்கில் அதிகரித்துச் செல்கின்றன. தமிழ்மக்கள் வெளியேறி வருகின்றனர். இந்த நிலைமை தொடர்ந்தால், வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் அவர்களது அடையாளத்தையும், சுய கௌரவத்தையும், பேணிப் பாதுகாக்க முடியாமல் போய்விடும். இதனை சர்வதேசம் அனுமதிக்கக் கூடாது. அவ்வாறு நடந்தால் இது மோசமானதொரு உதாரணமாக போய்விடும். இதனை சர்வதேசம் அனுமதிக்கக்கூடாது. இந்திய ஆங்கில ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே, சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

இத்தனை அனுபவங்களுக்கு பின்னரும் சம்பந்தனுக்கு சர்வதேச சமூகம் தொடர்பில் தெளிவானதொரு பார்வையில்லையென்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

ஈழத் தமிழர்களின் பிரச்னைகளை விடவும் பாரதூரமான பிரச்சனைகளை உலகம் கண்டிருக்கின்றது. உலகமே பார்த்துக் கொண்டிருக்கும் போது தான், 1994இல், ருவாண்டாவில் நூறு நாட்களில் எட்டு லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். இந்த மக்களை பாதுகாப்பதில் ஐக்கியநாடுகள் சபை உரியவாறு செயற்பட்டிருக்கவில்லையென்னும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இதே போன்று, குவாட்டமாலாவில் இரண்டு லட்சம் மாயன் பழம்குடி மக்கள் கொல்லப்பட்ட போதும், ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்து விட்டாகவே விமர்சிக்கப்பட்டது.

அதேபோன்று, இலங்கையின் இறுதி யுத்தத்தின் போதும், அப்பாவி மக்களை பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்து விட்டதாகவே பின்னர் அறிக்கை வெளியிடப்பட்டது. எனவே சர்வதேசத்தை பொறுத்தவரையில், ஈழத் தமிழர் விவகாரம் முதல் விவாகரமுமல்ல கடைசி விவகாரமுமல்ல.

இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபையென்பன அனைத்துமே அரைவழி நண்பர்கள் தான். அவர்கள் நமது அனைத்து விவகாரங்களுடனும் பயணம் செய்யப் போவதில்லை. நாம் தான் கிடைக்கும் ஒவ்வொரு வாய்புக்களையும் உச்சளவில் பயன்படுத்தி, மக்களின் நலன்களை பாதுகாக்கும் உபாயங்களை கண்டடைய வேண்டும்.

இன்று, பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியடைந்து விட்டதாக தனது இயலாமையை முன்வைக்கும் சம்பந்தனோ ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில் முன் வைக்கப்பட்ட ஆலோசனைகள் எவற்றையுமே கருத்தில் கொள்ளவில்லை. ரணில்-மைத்திரி காலத்தை உச்சளவில் பயன்படுத்தியிருந்தால், அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்களை அமுல்படுத்துவதுடன், அதற்கு மேலும் சில வியடங்களில் முன்னேற்றத்தை கண்டிருக்கலாம். ஆனால் சம்பந்தன் எதனையும் கருத்தில் கொள்ளவில்லை. புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டு வர முடியமென்று நம்பி, ஐந்து வருடங்களை வீணாக்கியிருந்தார்.

யுத்தம் நிறைவுற்று பதின்மூன்று வருடங்களாகி விட்டது. இந்தக் காலத்தில் ஒரு இஞ்சி கூட முன்னோக்கி நகர முடியவில்லை. இனியும் முடியுமா என்னும் கேள்வியுடன் தான், தமிழர்களின் தேசிய அரசியல் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. இப்போதும் கூட சம்பந்தன், தனது தவறுகளை எண்ணிப் பார்க்காமல், சர்வதேச சமூகத்தை நோக்கி கோரிக்கை முன்வைக்கின்றார். இந்தக் காலத்தில் கிடைத்த வாய்ப்பென்று சிந்தித்தால், ரணில்-மைத்திரி ஆட்சிக்காலம் தான் உச்சமானது.

ஆனால் அதனை சரியாக பயன்படுத்தவில்லை. இதற்கு சிங்கள ஆட்சியாளர்களை குற்றம்சாட்டுவதில் எவ்வித பயனுமில்லை. சிங்கள ஆட்சியாளர்களின் வரலாறு தெரிந்து தானே, நாங்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு செல்கின்றோம். பின்னர் அரசாங்கம் தீர்வை வழங்கவில்லையென்று புலம்புவதில் என்ன அர்த்தமுண்டு. ஒவ்வொரு பேச்சுவார்த்தைக்கு செல்லும்போதும், நன்கு திட்டமிடப்பட்ட வேலைத் திட்டமொன்றுடன் சென்றிருக்க வேண்டும். பேச்சுவார்த்தையின் மூலம் உச்சமான நன்மைகளை எவ்வாறு அடைவதென்று சிந்தித்து, ஒவ்வொரு நகர்வையும் முன்னெடுத்திருக்கவேண்டும். அதனை செய்யாது, வெறுமனே சர்வதேச சமூகத்திடம் முறையிடுவதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை.

இலங்கை தமிழர் விவகாரத்திற்கான எந்தளவு தலையீடு செய்யலாமென்பதில் நாடுகளின் ஒரு தெளிவான பார்வையுண்டு. எல்லைக்கோடுமுண்டு. இத்தனை அழிவுகள், இத்தனை கோரிக்கைகள், இத்தனை பிரேரணைகளுக்கு பின்னரும் கூட, இந்தியா ஒன்று தான், தமிழ் மக்களுக்கு, அரசியல் பிரச்னையொன்றிருப்பதாக, கூறிவரும் ஒரேயொரு நாடாகும். இதனை புரிந்து கொள்ளாமல், சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை வைப்பதில் எவ்வித பயனுமில்லை.

# சிவபெருமான் யாருடைய ஆள்? ஆறு.திருமுருகனிடம் இராணுவம் கேட்ட கேள்வி!

சிவபெருமானின் அடையாளமான சிவலிங்கத்தினை வைப்பதில் கூட இடர்பாடுகளுக்கு முகம் எடுக்க வேண்டியுள்ளதாக தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார். 08 டிசம்பர் 2022 செம் மணியில் 7 அடி சிவலிங்க பிரதிஷ்டையின் பின் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மாத இறுதிப் பகுதியில் நாவற்குழி பகுதியில் சிவலிங்கத்தினை வைக்க நிரந்தரமான கட்டடம் ஒன்று அமைக்க வேண்டும் என சிவ பூமி அறக் கட்டளையினர் தீர்மானித்திருந்தோம் .

அதனடிப்படையில் அதற்குரிய பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது பாதுகாப்பு தரப்பினர் வந்து பலதடவை விசாரணை மேற் கொண்டார்கள். நாங்கள் கூறினோம் இது ஒரு கோவில் சைவ கோவில் இந்துகளின் தெய்வமாகிய சிவபெருமானின் அடையாளமாக சிவலிங்கம் தான் இங்கே வைக்கப் போகின்றோம் என கூறினோம்.

அப்போது கேட்டார்கள் சிவபெருமான் என்றால் அவர் யாருடைய ஆள் என்று நாங்கள் கூறினோம் அவர்தான் எங்களுடைய பரம்பொருள் என்று கூறினோம். அதையும் இரண்டு பக்கங்களில் எழுதிச் சென்றார்கள்.

அவ்வாறு பல விசாரணைகளுக்கு நாங்கள் முகம் கொடுத்தோம் ஒரு சிவ பெருமானின் அடையாளமான சிவலிங்கத்தினை யாழ்ப்பாணத்தில் வைப்பதற்கு பல இடர்பாடுகளை எதிர் நோக்க வேண்டி இருக்கின்றது. குறிப்பாக விழ விழ எழும்புவோம் யாழ்ப்பாணத்தவர்கள் என்றால் அவ்வாறு தான் யுத்த காலத்தில் கூட எமது இந்து மதத்தை கட்டி



காத்து வந்த நாம் தற்போது சிவன் சிலைகளை பல இடங்களில் வைப்பதன்



மூலமே இந்து மதத்தின் அடையாளங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் குறிப்பாக இந்த பகுதியில் மூன்று ஏக்கர் காணியினை கொள்வனவு செய்துள்ளோம் அதற்கு உதவிய அரச திணைக்கள அதிகாரிகளுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் .

அத்தோடு இந்தவீதியினால் பயணிக்கும் அடியவர்கள் சிவலிங்கத்தை வணங்கி யாழ்ப்பாண நகருக்குள் பிரவேசிப்பதற்கு ஏற்றவாறாக ஒரு புனிதத் தன்மையோடு இந்த இடத்தினை பேணுவதற்காகவும் இந்த இடத்தில் ஒரு நிரந்தர கட்டட த்தை அமைத்து 7 அடி சிலையினை அதாவது கருங் கல்லிளான ஏழுஅடி சிவலிங்கத்தினை அமைத்து நித்தம் ஒரு பூஜை வழிபாடுகளும் இடம் பெறக் கூடியவாறு ஏற்பாடுகளை செய்திருக்கின்றோம் என்றார்.

# அதிகாரப் பகிர்வை இனவாதிகளே வலியுறுத்தும் சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்கிறார் டக்ளஸ்

அதிகாரப் பகிர்வினை மேற்கொள்ளுமாறு இனவாதிகளும் சொல்வதற்குரிய சூழலை ஏற்படுத்த வேண்டுமே தவிர, இனவாத சக்திகளுக்கு மெல்வதற்கு அவலை கொடுக்க கூடாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுத்தியுள்ளார்.



நாடாளுமன்றத்தில் 06 டிசம்பர் 2022 இடம் பெற்ற கடற் றொழில் அமைச்சு தொடர்பான வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த விவாதத்தில், கடற்றொழில் அமைச்சின் செயற்பாடுகள், கடந்த கால அடைவுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக தெளிவுபடுத்திய கடற்றொழில் அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்

கௌரவ ஜனாதிபதி அவர்கள், தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு விடுத்திருக்கின்ற அழைப்பினை ஏற்று அதனை எமது மக்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்கு தமிழ் அரசியல் தரப்பினர் முன்வர வேண்டும். எம்மைப் பொறுத்த வரையில், தற்போது இந்த நாட்டின் அரசியல் யாப்பில் நடைமுறையில இருக்கின்ற எமது அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தினை பலப்படுத்தி அதனை முன்னெடுப்பதையே எமது மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினை க்கு ஓர் ஆரம்பத் தீர்வாகக் கருது கிறோம். இல்லாததைப் பற்றிக் கதை த்து இருப்பதையும் கைவிட்டு விடக் கூடாது என்பதை நாம் வலியுறுத்து கிறோம்.

தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பில், கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதை யாக இப்போதே சில நாடகங்கள் அரசியல் அரங்கில் மேடையேற்றப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# முழுமையான இலங்கைக்கே இந்தியாவின் ஆதரவு, உதவி! அது தனித்து தமிழ்நல அணுகுமுறையல்ல என்கிறார் ஜெய்சங்கர்

பொருளாதார நெருக்கடியில் சிக்கிய நமது அயல்தேசமான இலங்கைக்கான இந்திய உதவி தனித்து தமிழ்நல அணுகுமுறையில் முன்னெடுக்கப்படவில்லை. அது முழுமையான இலங்கைக்கான உதவி

இவ்வாறு 07 டிசம்பர் 2022 புதுடில்லியில் இந்திய ராஜய சபையில் உரையாற்றிய அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

மறுமலர்ச்சி தி.மு.கவின் தலைவர் வை.கோ இலட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர், பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டனர், குழந்தைகள் கொல்லப்பட்டனர், இலங்கையில் அப்போதைய அரசாங்கம் ஆயுதம் கொடுத்தது, இன்னும் இந்திய அரசு இலங்கைக்கு ஆதரவாக உள்ளது என்று வைகோ குற்றம் சுமத்தி எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்



வை.கோஜியின் இரண்டு வினாக்கள் தொடர்பாக பதிலளிக்க விரும்புகின்றேன். ஒன்று - ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான பிரேரனையில் நாம் வாக்களிக்காமல் விட்டமை பற்றியது. இது இந்தியாவின் நீண்டகால நிலைப்பாடு. எங்களது அரசு மாத்திரமல்ல இதற்கு முந்திய அரசுகளும் கூட இத்தகைள அணுகுமுறைமையையே கடைப்பிடித்தன.

இலங்கையின் தமிழ்சமூகத்தின் நெருக்கடிகளை உரியமுறையில் அணுகித் தீர்ப்பதற்கும் அவர்களை மேம்பாட்டையச் செய்வதற்கும் இதுவே ஆக்கபூர்வமான வழிமுறை என்று அவை கருதிச் செயற்படுகின்றன. அதையே தொடர்ந்தும் எங்கள் அணுகுமுறையாக முன்னெடுக்கின்றோம்.

இந்நிலையில் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக கையொப்பமிடப்பட்ட 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் நிலை தொடர்ந்தும் மாற்றங்களுக்கு அடிப்படையாக இருக்கும் என்று ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அடுத்தது இலங்கைக்கான எங்களின் உதவி பற்றியது. அது முழுமையான இலங்கைக்கான உதவி. அதனை உறுப்பினர் வை.கோ வரவேற்க வேண்டும். உதவி வழங்கும் விடயத்தில் நாம் தனித்து தமிழ் நல அணுகுமுறையை முன்னெடுக்கவில்லை. முழுமையாக தமிழ் சமூகம் சிங்கள சமூகம் ஏனைய சமூகங்களும் அடங்கிய அனைத்தையும் கொண்ட முழு இலங்கைக்குமே நாம் அந்த உதவிகளைச் செய்தோம். கடுமையான பொருளாதார சூழ்நிலையில் சிக்கியுள்ள அண்டை நாட்டிற்கு ஆதரவு வழங்குவதில் நாம் வகுப்புவாத அணுகுமுறையை எடுக்கவில்லை என்றார்.

# சீனா உறுதிமொழி அளித்தால் அடுத்த மாதமே அனுமதி! ஐ.எவ்.எம். வழங்கும் என்கிறார் மத்திய வங்கி ஆளுநர்!

இந்த மாதத்துக்குள் கடன் மறுசீரமைப்புக்கான உறுதிமொழியை சீனா வழங்கினால் ஜனவரிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) நிதியுதவிக்கான அனுமதியைப் பெற முடியும் என்று எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

பொருளாதார உச்சி மாநாட்டில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், சீனாவின் உறுதிமொழியை பெறுவதற்கு இலங்கை தற்போது செயல்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர்,

கடன் மறுசீரமைப்புக்கான ஆதரவில் இலங்கையின் கடன் வழங்குநர்களுடன் பொதுவான ஒருமித்த கருத்தைப் பெறுவதே முன்னுரிமை என்று குறிப்பிட்டார்.

நவம்பர் மாதத்துக்குள் சீனாவின் உறுதிமொழியைப் பெறுவதற்கு முதலில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தாமதத்தின் பின்னர் சீனாவுடனான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டது.

சீனாவின் உறுதிமொழிகளைப் பெறுவதில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், இலங்கைக்கு ஆதரவாக பாரிஸ் கிளப் மற்றும் இந்தியா ஏற்கெனவே உறுதி அளித்துள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

திட்டமிட்டபடி நவம்பரில் சீனாவின் உத்தரவாதம் கிடைத்திருந்தால்,நிதி உதவிக்கான ஐ. எம். எவ். பணிப்பாளர் சபையின் அனுமதி டிசெம்பரில் கிடைத்திருக்கும். எவ்வாறாயினும், சீனாவின் பேச்சில் ஏற்பட்ட தாமதம் இதனைத் தடுத்துள்ளது. டிசெம்பர் மாதத்துக்குள் சீனாவின் உறுதிமொழியைப் பெறுவதே நமது நோக்கம்.

அத்தகைய உடன்பாடு எட்டப்பட்டால், ஜனவரி மாதம் நிதி உதவிக்கான சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதியை பெற்றுக் கொள்ள முடியும் என்றார



இது இவ்வாறிருக்க சீனாவின் கப்பல் ஒன்று 07.12.2022 நாட்டை வந்தடைந்துள்ளது. இலங்கையில் நிலவும் பல நெருக்கடிகளுக்கு சீன அரசாங்கம் பல வழிகளில் உதவிகளை செய்து வருகின்றது.

அந்த வகையில் இலங்கை மக்களுக்கு தேவையான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ பொருட்களை நன்கொடையாக சீன அரசாங்கம் வழங்கியுள்ளது.

நன்கொடை இந்த மருந்து பொருட்கள் 2 பில்லியன் ரூபாய் பெறுமதியானவை என இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மொத்தம் 24 கொள்கலன்களில் 255 மெட்ரிக் தொன் எடையுடைய மருந்துகள் மற்றும் மருத்துவ பொருட்கள் நாட்டை வந்தடைந்துள்ளதாக என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜீன் மாதம் முதல் இதுவரை இலங்கைக்கு 5 பில்லியன் ரூபாய் பெறுமதியான மருந்துகளை சீனா நன்கொடையாக வழங்கியுள்ளதாக சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் 14 வயது மாணவி குழந்தை பிரசவிப்பு! 73 வயது முதியவர் கைது!

யாழ்ப்பாணத்தில் 14 வயது மாணவி ஒருவர் குழந்தையை பிரசவித்துள்ளார். சிறுமியின் கர்ப்பத்துக்கு காரணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 73 வயது முதியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.இந்த முதியவர் சிறுமியுடன் நெருங்கி பழகினார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த முதியவர் சிறுமியின் குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 16 வயது மாணவி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் 72 வயது முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பாதிப்புக்குள்ளான குறித்த சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணம் குப்பிளான் பகுதியில் 130 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 38 வயதான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்.மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கைது செய்யப்பட்ட பெண்ணையும் பெண்ணிடம் மீட்கப்பட்ட போதைப் பொருளை மேலதிக நடவடிக்கைக்காக சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க பாரிய நிதிக் குற்றச்சாட்டுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி விளக்கமறியலில் அசாதாரண சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணிகள் 06 டிசம்பர் 2022 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். சட்டத்தரணி மஞ்சு ஸ்ரீசந்திரசேன இந்த முறைப்பாட்டை முன்வைத்துள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகளின் இந்த வழக்கத்துக்கு மாறான உடல் சோதனைகளால் திலினி பிரியாமாலியின் அந்தரங்க உறுப்புகளிலும் காயம் ஏற்பட்டதாகவும், அதற்கான மருந்தையும் சிறைச்சாலை வைத்தியசாலை வழங்கியதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# இலங்கையில் பெற்றோர்கள் போதைக்கு ....

(3ம் பக்கத் தொடர்ச்சி) நாட்டின் பொறுப்புகளை ஏற்க அடுத்த தலைமுறையே இருக்காது. பாடசாலைகள் மற்றும் பாடசாலைகளுக்கு வெளியே சோதனை தொடங்க வேண்டும். பாடசாலைகளுக்குள் போதைப்பொருள் நுழைவதற்கான சாத்தியமான அனைத்து வழிகளும் தடுக்கப்பட வேண்டு.

மதுபானம் மற்றும் சிகரெட் போன்ற போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபடும் நபர்கள் அதிகபட்ச தண்டனையை எதிர் கொள்ள வேண்டும். போதைப்பொருள் விற்பனை செய்பவர்களுக்கும், அவற்றை வாங்குபவர்களுக்கும் அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என மருத்துவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு!
## தமிழ்மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துவதை விடுத்து வெளிநாட்டு தூதரகங்கள், உதவி நிறுவனங்களிடமாவது கோரிக்கை வையுங்கள்



யாழ்ப்பாணம் மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு காரணமாக மக்கள் பிரதிநிகள் மற்றும் சமய சமூக நிறுவனங்கள் அவசரமாக உதவி செய்ய முன்வாருங்கள் என செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் கோரிக்கை விடுத்ததுள்ளார்.

யாழ் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

யாழ்ப்பாணம் மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்துக்கத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொது மக்களின் அவசிய அத்தியாவசிய தேவையாக மருந்து உள்ளது . நாடு முழுவதும் பொருளாதார பிரச்சினை இருந்தாலும் யாழ் மாவட்ட வைத்தியசாலைகளில் மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த மருந்துகள் இன்றி மக்கள் அவலப்படுகின்றார்கள் பெரும்பாலும் வைத்தியர்கள் வெளியிலேயே வாங்குமாறு எழுதிக் கொடுக்கின்றார்கள். வெளியே விற்பனை செய்கின்ற மருந்து விற்பனை நிலையங்களில் மருந்துகளின் விலை உச்சத்தை தொட்டுள்ளது.

மிகக் கவலையான விடயமாக தெல்லிப்பளையில் அமைந்துள்ள புற்றுநோய் வைத்தியசாலைக்கு அடிப்படை மருந்துகள் மிகவும் தட்டுப்பாடாக உள்ளது. வைத்தியசாலையின் வைத்தியர்கள் இதை பற்றி அறிவித்துள்ளார்கள்.

ஆனால் நாட்டு மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த இந்த விடயத்தில் கவனம் செலுத்தாது குறிப்பாக வைத்தியசாலைக்கு செல்லும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

சமய நிறுவனங்களாக இருக்கிற நாங்கள் 12 இலட்சம் ரூபாவுக்கு மருந்தினை பெற்று கொடுத்துள்ளோம். இந்த வாரம் செல்வச் சந்நிதி ஆச்சிரமம் 8 இலட்ச ரூபாவிற்கு மருந்தை பெற்றுக் கொடுத்துள்ளது. தெல்லிப்பளை வைத்தியசாலையில் இளம் பிள்ளைகளுக்கான மருந்துகளை ஏற்றுகிறார்கள். வயோதிபர்களுக்கு மருந்து ஏற்றுவதற்கு மருந்து இல்லாமையால் வைத்தியர்களும் எதனை செய்வது என்று அந்தரித்து வருகிறார்கள்.

இந்த விடயத்தில் மக்கள் பிரதிநிதிகள் வெளிநாட்டு துதூவராலயங்கள், உதவி நிறுவனங்களிடமாவது கோரிக்கைகளை முன்வைத்து மக்களுக்கான உதவிகளை செய்ய வேண்டும். அவர்கள் இதில் கவனம் செலுத்தாது இருக்கிறார்கள்.

பலர் உதவி செய்ய இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த விடயத்தை தெளிவுபடுத்த வேண்டும். பாராளுமன்றத்தில் பேசப்படும் விடயங்கள் கூட அக்கறைப்படுத்தப்படுவதாக இல்லை. யாரும் எதையும் பேசலாம் அதற்கு எதுவும் பலனில்லை நிண்டநேரம் பாராளுமன்றத்தில் பேசினோம் என்பதற்கு இன்று பலனில்லை. மக்களை நேசிப்பவர்கள் வீடுவீடாக சென்று வாக்கு கேட்பவர்கள் ,மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் வெறுமேன விழாக்களுக்கும், கூட்டங்களுக்கும் கொண்டாட்டங்களுக்கும் போவது மட்டுமல்ல நோயுற்றவர்கள், துன்பப்படுபவர்கள் மத்தியில் சென்று அவர்கள் பிரச்சினைகளை கேட்க வேண்டும். தயவு செய்து மக்கள் பிரதிநிகளாக இருப்பவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி தலைவர்கள் ,உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள் நேரடியாக வைத்தியாலைகளுக்கு செல்லூங்கள். குறிப்பாக தெல்லிப்பளை வைத்தியசாலையில் வடக்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்களே சிகிச்சை பெற்றுவருகிறார்கள். சிறுவர் முதல் வயோதிபர்கள் சிகிச்சைக்காக வருகிறார்கள் இவர்களை காப்பாற்ற வைத்தியர்கள் போராடுகிறார்கள். ஆனால் கற்றறிந்த சமூகம், மக்களின் பிரதிநிதிகள் என்று கூறுபவர்கள் இதில் கவனம் செலுத்தாது இருப்பது மிக கவலையான விடயம். எனவே சகல தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் நாங்கள் தான் மக்களின் தலைவர்கள் என கூறுபவர்கள். உடனடியாக தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு மட்டுமன்றி யாழ் போதனா வைத்தியசாலை உட்பட அனைத்து பகுதிகளிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு சென்று வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்துகளின் விபரங்களை பெற்று தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலோ அல்லது தங்களுடைய சிறப்புரிமையை பயன்படுத்தி இந்தியா உள்ளிட்ட சகல துதூவராலயங்களிடம் கோரிக்கைகளை முன்வைத்து நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு முன்வருமாறு தமிழ்மக்கள் சார்பில் சமூக பொறுப்புள்ளவன் என்ற வகையில் சமூகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன் என கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

# சர்வதேசம் சமாதானத்தை விரும்பினால் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும்!

வடக்கு,கிழக்கில் தற்போது காணப்படும் நிலை தொடர்ந்தால் தமிழ் தமிழ் மக்கள் அடையாளம் சுயமரியாதை ஏன் கௌரவத்தை கூட பேண முடியாத நிலையேற்படும் என தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கவலை வெளியிட்டுள்ளார்.

புரொன்ட்லைன் சஞ்சிகைக்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார் அரசியல் தீர்வு தொடர்பில் இலங்கை அரசாங்கம் தீர்வுகளை முன்வைக்கவில்லை, ஒரு பக்கத்தில் வடக்கிலும் கிழக்கிலும் மீள்குடியேற்றம் காரணமாக சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது அதேவேளை வன்முறைகள் மற்றும் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக தமிழ் மக்கள் நாட்டிலிருந்து தப்பி வெளியேறுகின்றனர். இந்த நிலை தொடர்ந்தால் தமிழ் மக்கள் அடையாளம் சுயமரியாதை ஏன் கௌரவத்தை கூட பேண முடியாத நிலையேற்படும். சர்வதேச சமூகம் இந்த நிலையேற்படுவதற்கு அனுமதிக்ககூடாது. உலகிற்கு இது பிழையான முன்னுதாரணமாக மாறும். பிராந்தியத்திலும் நாட்டிலும் சமாதானத்தை சர்வதேச சமூகம் விரும்பினால் அவர்கள் இந்த பிரச்சினைக்கு தீர்வை காண வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாரிஸ் கிளப் கடன் வழங்கும் நாடுகள், இலங்கையின் கடனுக்கு 10வருட கால அவகாசத்தை முன்மொழிந்துள்ளதாக தெரிவித்துள்ளன.


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 10 டிசம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி மகேஸ்வரி கிருஷ்ணபிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளையொட்டியும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 10 டிசம்பர் 2022 சனிக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். இணையர்கள் இருவரதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி

பேராலை பளைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களது 23வது ஆண்டு நினைவு தினம் 14 டிசம்பர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 33வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வல்லிபுரம் கந்தசாமி

தெல்லிப்பளை கட்டுவன் வடக்கைச் சேர்ந்த முன்னாள் இ.போ.ச சாரதி வல்லிபுரம் கந்தசாமி அவர்களது 33வது ஆண்டு நினைவு நாள் 13 டிசம்பர் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அவரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு வல்லிபுரம் கந்தசாமி அவர் களது ஆத்மா சாந்தியடை.யப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கந்தையா செல்லம்மா

அனலைதீவு 4ம்வட்டாரம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி கந்தையா செல்லம்மா அவர்களது 21வது ஆண்டு நினைவு தினம் 11 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திருமதி கந்தையா செல்லம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் எல்லாம் வல்ல எம் பெருமான் ஐயனாரைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# நிலாவரைக் கிணற்றுக்குள் புதைந்திருக்கும் மர்மங்கள்!

## இது நம்ம யாழ்ப்பாணம் 9

யாழ்.நகரில் இருந்து
ஈழநாட்டிற்காக - பகிரதன் -

யாழ்ப்பாண மாவட்டத்தில் புத்தூரில் இருக்கும் ஒரு கிராமம் தான் நிலாவரை. இந்த இடத்தில் இயற்கையாக அமைந்த ஆழங்காண முடியாத கிணறு தான் இந்த இடத்தை பிரசித்தி பெற்ற இடமாக மாற்றியது. இந்தக் கிணற்றில் நீர் என்றும் வற்றாமல் இருப்பதுடன், அருகிலுள்ள கிராமங்களின் வேளாண்மைக்கு நீர்ப்பாசனத்தை வழங்கியும் வருகின்றது. இந்தக் கிணற்றிலிருந்து கிடைத்த நீரில் தான் அருகேயுள்ள பல கிராமங்களில் விவசாயம் செழிப்புற்றிருந்தது.

யாழ்ப்பாணத்தின் அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்த ஆழங்காண முடியாத கிணறு உல்லாசப் பயணிகளை அதிகளவுக்கு கவர்ந்திழுத்தது. இந்தக் கிணற்றுக்குள் பெருமளவு ஆச்சரியங்களும், மர்மங்களும் பொதிந்துள்ளன. அவற்றைக் கண்டறியும் வகையில், நூற்றாண்டு காலமாக பல நாடுகளிலிருந்து வந்த ஆராச்சியாளர்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்கள். ஆனால், முழுமையான முடிவுகளைப் பெறமுடியவில்லை.

நிலாவரை கிணறு குறித்து செவிவழியாகப் பேசப்படும் பல தகவல்களை உறுதிப்படுத்துவதாக ஆறு வருடங்களுக்கு முன்னர் அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பெறுபேறுகள் அமைந்திருந்தன. 2016 இல் நிலாவரைக் கிணற்றின் மர்மத்தைக் கண்டறிவதற்காக இலங்கை கடற்படையின் சுழியோடிகள், ரோபோக்களின் உதவியுடன் நவீன பாதுகாப்பு நடைமுறைகளையும் பின்பற்றியவாறு கிணற்றுக்குள் இறங்கினார்கள்.




கிணற்றுக்குள் 55.5 மீற்றர் அதாவது 182 அடி சென்ற போது, கீழ்மட்டம் தென்பட்டதாக அவர்கள் தெரிவித்தார்கள். கிணற்றின் அடிப்பாகத்தில் மூன்று மாட்டு வண்டிகள் காணப்பட்டன. சுழியோடிகள் கொண்டு சென்று ரோபோக்கள் எடுத்த படங்களின் மூலம் இது உறுதிப்படுத்தபபட்டது. இந்த மாட்டு வண்டிகள் கிணற்றுக்குள் எவ்வாறு வந்தன அல்லது விழுந்தன என்பது தொடர்பில் எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை. வண்டில்களின் நிலையை வைத்துப் பார்க்கும்போது, இந்தச் சம்பவம், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்றிருக்கலாம் என்ற அனுமானத்தை ஆய்வாளர்கள் வெளியிட்டார்கள்.

ரோபோக்கள் செய்த ஆய்வில், கிணற்றின் ஆழமான இடங்களில் பல திசைகள் நோக்கி, குகைகள் போன்று பல சுரங்க வழிகள் காணப்படுகின்றன. இவற்றில் சில இடங்களில் வேகமானதும் சில இடங்களில் சாதாரணமானதுமான நீரோட்டங்கள் உள்ளன. நிலாவரைக் கிணற்றுக்குள் எலுமிச்சம் பழம் ஒன்றைப் போட்டால், அதை சில மணி நேரத்தின் பின்னர், கீரிமலைத் தீர்த்தக் கேணியில் எடுக்கலாம் என்ற ஒரு தகவல் உள்ளது. இதுவும் யாழ்ப்பாணத்தில் பரபலாகப் பேசப்படும் செவி வழிச் செய்திகளில் ஒன்று. அதற்கான சாத்தியப்பாடுகள் இருப்பதை ரோபோக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் நிரூபணம் செய்துள்ளன. ஏனெனில், கிணற்றில் இருந்து, பல திசை நோக்கிச் செல்லும் சுரங்கப் பாதைகளின் ஊடான நீரோட்டங்கள் காணப்படுகின்றன.

கீரிமலைக் கேணியின் தென்கீழ் மூலையில், ஒருவர் உள்ளே நுழைந்து செல்லக்கூடிய அளவுக்கு குகை ஒன்று காணப்படுவதை பார்க்க முடியும். அதனூடாகவே கேணிக்கு நல்ல தண்ணீர் வருகின்றது. இந்தக் குகைக்கும் நிலாவரைக் கிணற்றில் ரோபோக்கள் உறுதிப்படுத்திய குகைக்கும் இடையிலான நீரோட்டத்தொடர்பு இருக்கலாம் என்ற கருத்தை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆனால், இது குறித்து மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை உள்ளது. நிலாவரைக் கிணற்றுக்கு நேரடியான நிலத்தடி நீர் தொடர்பு இருப்பதனால் வரட்சியின் போதும் மழைக் காலத்தின் போதும் நீர் மட்டம் குறைவதோ கூடுவதோ கிடையாது. அதனால் தான் கடுமையான வரட்சிக் காலத்தின் போதும் நிலாவரையிலிருந்து பல கிராமங்களுக்கு நீர் விநியோகத்தைக் கொடுக்கும் நிலை இருந்தது.



நிலாவரைக் கிணற்றுக்கு நேர் எதிராகக் காணப்படும் சிவன் கோவிலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. அந்தக் கோவிலின் தீர்த்தக் கேணியாகவும் இந்தக் கிணறு பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என்பதை அதன் அமைவிடமும், அமைப்பு முறைகளும் உறுதிப்படுத்துகின்றன. இது மிகவும் புராதனமான சிவாலயமாகும்.

போர் முடிவுக்குப் பின்னர் இந்தப் பகுதி உல்லாசப் பயணிகளைப் பெருமளவுக்குக் கவரும் ஒரு பகுதியாக இருக்கின்றது. இதனை சோலையாக்கிக் கொண்டு உயர்ந்து விருட்சங்களாக வளர்ந்திருக்கும் வேம்பு, வாகை மரங்களும் ஒரு அமைதியான - மனதுக்கு இதத்தைக் கொடுக்கும் பகுதியாக இதனை மாற்றியிருக்கின்றது.

நிலாவரைக் கிணறு, குடாநாட்டில் ஒரு பொக்கிஷமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய கூடிய மரபுரிமைச் சொத்து. இதன் பராமரிப்பு பணிகளை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை மேற்கொள்கின்றது. கடந்த இரண்டு வருடங்களில் இந்தப் பகுதி கொரோனா பரவல் காரணமாக வெறிச்சோடிப் போய்க் காணப்பட்ட அதேவேளையில், அரசியலில் சர்ச்சைக்குரிய ஒரு பகுதியாகவும் மாறியிருந்தது.

இப்போது அது தொடர்பான கவனம் சற்று குறைந்திருக்கும் நிலையில், இராணுவ முகாம் அங்கு அமைக்கப்பட்டிருப்பது பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றது. தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான பாதுகாப்புக்காகவா இந்த முகாம் என்ற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை. இந்தப் பகுதியில் ஏற்கனவே சில கடைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவை சிங்களவர்களால் அமைக்கப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுத் தொன்மை வாய்ந்த தமிழர்களின் பகுதிகளை ஏதோ ஒரு வகையில் பௌத்த - சிங்களப் பகுதியாக மாற்றிவிடுவது என்ற இலக்குடன் செயற்படும் அரசாங்கத்தின் இரகசிய நிகழ்ச்சி நிரலில் நிலாவரையும் உள்ளடக்கப்பட்டு ள்ளது என்பது கட ந்த வருடம் இடம் பெற்ற சம்பவங்களின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டது. இதன் அடுத்த கட்டமாக அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்பது தான் தெரியவில்லை.

உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
"சங்கீத சங்கமம் 2023"

## 15வது ஆண்டு நினைவஞ்சலி

### செல்வி Dr ஜெயபாரதி கணேசபிள்ளை



பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி கலாநிதி ஜெயபாரதி கணேசபிள்ளை அவர்களது 15வது ஆண்டு நினைவு நாள் 11 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் செல்வி ஜெயபாரதியின் பெற்றோர்களும் சகோதரங்களும் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். செல்வி ஜெயபாரதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 22வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு பொன்னையா வேலுப்பிள்ளை



கச்சாச்சந்தி கொடிகாமத்தைச் சேர்ந்த திரு பொன்னையா வேலுப்பிள்ளை அவர்களது அவர்களது 22வது ஆண்டு நினைவு தினம் 09 டிசம்பர் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பொன்னையா வேலுப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

03 டிசம்பர் 2022 முதல் 09 டிசம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளு கின்றோம்.

## மேலதிக விபரங்களுக்கு:-

## ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 94வது பிறந்த நன்நாள் நினைவாக



### திரு செல்லப்பா பாலசிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது 94வது பிறந்த நன்நாள் 05 டிசம்பர் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்த நாள் நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அன்னலெட்சுமி மருதப்பு

நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி மருதப்பு அன்னலெட்சுமி அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 03 டிசம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அவரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மருதப்பு அன்னலெட்சுமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை ஸ்ரீகாந்தராசா

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை ஸ்ரீகாந்தராசா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 03 டிசம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சின்னத்துரை ஸ்ரீகாந்தராசா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா

யாழ்ப்பாணம் நல்லூரடியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா அவர்களின் 35வது ஆண்டு நினைவுநாள் 05 டிசம்பர் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது பிள்ளைகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் உயர்திரு V.K நாகராஜா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு V.K. நாகராஜா அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 05 டிசம்பர் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு V.K.நாகராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தர்மதர்சினி கிருபாகரன்

புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தர்மதர்சினி கிருபாகரன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 10 டிசம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தர்மதர்சினி கிருபாகரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 41,31வது ஆண்டு நினைவஞ்சலி



திரு இராமலிங்கம் நடுவில்
திருமதி
நடுவில் புவனேஸ்வரி

யாழ்ப்பாணம் நல்லூரடியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு இராமலிங்கம் நடுவில் அவர்களது 41வது ஆண்டு நினைவஞ்சலியும் திருமதி நடுவில் புவனேஸ்வரி அவர்கள் 31வது ஆண்டு நினைவஞ்சலியும் 10 டிசம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இராமலிங்கம் நடுவில், திருமதி நடுவில் புவனேஸ்வரி ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




03 டிசம்பர் 2022 சனிக்கிழமை நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி அன்னலெட்சுமி மருதப்பு அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




03 டிசம்பர் 2022 சனிக்கிழமை யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்துரை ஸ்ரீகாந்தராசா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





கனடாவில் வசிக்கும் திருமதி ஸ்ரீவதனா பிரதாபன் அவர்களது பிறந்த நன்நாள் 29 நவம்பர் 2022 ஆகும். அன்றைய நாளுக்காக திருமதி ஸ்ரீவதனா பிரதாபன் அவர்கள் 04 டிசம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




05 டிசம்பர் 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி துஷியந்தன் இந்துகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜெய்சான் துஷியந்தனின் ஐந்தாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஜெய்சான் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்.




05 டிசம்பர் 2022 திங்கட்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு V.K. நாகராஜா அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




05 டிசம்பர் 2022 திங்கட்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது 94வது பிறந்த நாளாகும். அன்றையதினம் அவரது நினைவாக குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




05 டிசம்பர் 2022 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 நவம்பர் 2022 கனடாவில் வசிக்கும் திரு திருமதி சரண்ராஜ் தர்சிகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் அக்ஷயனின் 12வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வன் அக்ஷயன் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து 06 டிசம்பர் 2022 செவ்வாய்க்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




07 டிசம்பர் 2022 புதன்கிழமை பிரான்ஸில் வசிக்கும் திருமதி வித்தியா விக்னேஸ்வரன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி வித்தியா விக்னேஸ்வரன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




08 டிசம்பர் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் சட்டத்தரணி யசோ சின்னத்துரை அவர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




09 டிசம்பர் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சபாபதிப்பிள்ளை கனகம்மா அவர்களது 90வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சபாபதிப்பிள்ளை கனகம்மா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## 90வது பிறந்த நன்நாள் வாழ்த்து



## திருமதி கனகம்மா சபாபதிப்பிள்ளை

கனடாவில் வசிக்கும் திருமதி கனகம்மா சபாபதிப்பிள்ளை அவர்களது 90வது பிறந்த நன்நாள் 09 டிசம்பர் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் திருமதி கனகம்மா சபாபதிப்பிள்ளை அவர்கள் தனது பிறந்த நன்நாளை முன்னிட்டு குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை 90 காணும் அன்னை கனகம்மா சபாபதிப்பிள்ளை அவர்கள் நோய்நொடியின்றி பல்லாண்டு காலம் நீடுழி வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள்.




09 டிசம்பர் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் சிவஸ்ரீ சிவா குருக்கள் சகானா இணையரது இரண்டாவது திருமணப்பதிவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




09 டிசம்பர் 2022 வெள்ளிக்கிழமை கச்சாய் வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த திரு பொன்னையா வேலுப்பிள்ளை அவர்களது 22வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# தமிழ் மிர்ரரின் 17வது ஆண்டு விழாவும் விருது வழங்கலும்.

தமிழ் மிர்ரர் ஆங்கில பத்திரிகையின் 17 வது ஆண்டு விழாவும் விருது வழங்கல் வைபவமும் நவம்பர் 6 ம் நாள் சீன கலாச்சார மண்டபத்தில் விமரிசையாக இடம் பெற்றது. பேச்சாற்றலில் கின்னஸ் சாதனை படைத்த தமிழ் நாட்டை சேர்ந்த கலாநிதி அ. கலியமூர்த்தி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். ஆடல், மற்றும் வாய்ப்பாட்டு பயிற்றுவிக்கும் போது வட இந்திய அல்லது வேற்று மாநிலத்தவரின் கலப்பில்லாமல் தமிழர் பண்பாடு சார்ந்த விடயங்களை கற்றுக்கொடுக்கும் படி இங்குள்ள ஆசிரியர்களை தமிழ் மிர்ரர் ஆசிரியர் சார்லஸ் தேவசகாயம் வினயமாக வேண்டி கொண்டார். அதன் படி அன்று நடந்த ஆடல் மற்றும் பாடல்கள் அநேகமாக முப்பாட்டன், மூத்த குடியோன், தமிழ் குடியின் முதல்வன் முருகன் பற்றியதாக அமைந்திருந்தது குறிப்பிட தக்கது என்பதுடன் பலராலும் பாராட்டப்பட்டது. மேலும் சமூகத்தில் பன்முக ஆளுமை கொண்ட பலரும், குறிப்பாக இளையோர் விருது வழங்கி உட்சாக படுத்தப்பட்டனர். அங்கு நடந்த நிகழ்வுகளில் சிலவற்றை இங்கு காணலாம். தர்மினி
































# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2022 புதன்கிழமை முதல் 21-01-2023 சனிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2022 புதன்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
25-11-2022 வெள்ளிக்கிழமை, 26.11.2022 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 27-11-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
02.12.2022 வெள்ளிக்கிழமை, 03.12.2022 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 11-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.


**ஆஞ்சநேயர் ஜெயந்தி**
23.12.2022 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல்,**
**படி ஏறி அபிஷேகம் செய்தல்ச பேட்டை துள்ளுதல்**
25-12-2022 ஞாயிற்றுக்கிழமை, 26.12.2022 திங்கட்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணி முதல் மாலை 3:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2022 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 31.12.2022 சனிக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் இடம் பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஷ்பாபிசேகம்**
01-01-2023 ஞாயிற்றுக்கிழமை முதல் 14-01-2023 சனிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருவாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
14-01-2023 சனிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2023 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



## SENIOR TAMILS SOCIETY OF PEEL

### THE ANNUAL Dinner, Dance & Music

SUNDAY - DECEMBER 11, 2022 AT 4:00 PM

*Inviting all to join and enjoy*

THE EXCELLENT DANCE & MUSIC PROGRAMMES

Donations:
VIP: $100
Members & Friends: $50

Contact Information:
Mr. A.T.Moorthy (President) @ 647 286 6130
Mr. N. Moorthy (Secretary) @ 416 473 5380

VENUE: PALACIO EVENT CENTRE
3410 Semenyk Cresent, Mississauga, ON L5C 4P8
Tel: 905 949 0555 | 416 520 0695

## Friends MATRIMONY

உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...

10,000க்கு மேற்பட்ட வரன்கள் கையிருப்பில்!

10,000+

இலங்கைத் தமிழர்களுக்கான உலகளாவிய திருமண இணையத்தளம்.



- 647 709 1536
416 477 6854
416 477 2259
- GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
- friendsmatrimonym@gmail.com

Mon to Fri
10AM to 7PM

Sat
1PM to 7PM

www.friendsmatrimony.com

# மாவீரர் நாள் 2022 உணர்த்துவது?

நியுஸிலாந்தில் வசிக்கும் ஒரு மூத்த தமிழ் ஊடகவியலாளர் கடந்த மாவீரர் நாளிலன்று பின்வருமாறு எனக்கு ஒரு செய்தி அனுப்பியிருந்தார் இன்று மாவீரர் நிகழ்வுக்குப் போனேன். கடந்த வருடங்களில் எனது பிள்ளைகள் வந்தனர். இப்போது




இல்லை.....எனது தம்பிக்கு நான் மட்டும் மலர் தூவி அஞ்சலி செய்தேன்.. இதை உங்களுடன் இன்று பகிர நினைத்தேன்... ..இப்போது என் தம்பிக்கு நான்..இனி வருங் காலத்தில்...? யார் வருவார்.....என யோசித்தேன் என் பிள்ளைகளின் பிள்ளைகள்....?

இது மாவீரர் நாளுக்கு மட்டுமல்ல பொதுவாகவே தாயகத்துக்கும் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்துக்கும் இடையில் உள்ள நெருக்கத்தைக் குறித்து உரையாடும் எவரும் சுட்டிக்காட்டும் ஒரு விடயம் தான். என்னுடைய நண்பர் ஒருவர் அடிக்கடி கூறுவார்.. உன்னுடைய சகோதரன் உனக்கு உதவுவான். ஆனால் அவனுடைய பிள்ளை உன்னுடைய பிள்ளைக்கு உதவுமா? என்று. இதே கேள்வியை வேறு ஒரு தளத்தில் நின்று இலங்கைக்கான முன்னாள் ஸ்கண்டிநேவியத் தூதுவர் ஒருவர் என்னிடம் கேட்டார்.'' முதலாம் தலைமுறை புலம் பெயரிகள் வயதாகி இறக்கும் பொழுது இரண்டாம் தலைமுறை எந்தளவு தூரம் தாயகத்தை நோக்கி ஈர்க்கப்படும்? என்று.

உண்மை ஆயுதப் போராட்டம் நடந்த காலகட்டங்களில் புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்தின் பெரும்பாலான கவனம் யுத்த களத்தை நோக்கி குவிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக முதலாம் தலைமுறை புலம் பெயரிகள் தாம் விட்டுப் பிரிந்த தாயகத்தை நோக்கி பிரிவேக்கத்தோடு ஊர்வலம் போனார்கள். வீதிகளை மறுத்தார்கள். ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள். தமது பெற்றோரின் அரசியல் நடவடிக்கைகளைப் பார்த்து அடுத்த தலைமுறையும் அதனால் ஈர்க்கப்பட்டது. அக்காலகட்டத்தில் ஒடுக்குமுறை ஒரு கொடிய போராக இருந்தது. அந்த ஒடுக்குமுறையின் விளைவாக தமிழ்மக்கள் உலகம் முழுவதும் சிதறி வாழ்ந்தாலும், அந்த ஒடுக்குமுறைக்கு எதிராக ஒன்றாக திரண்டு காணப்பட்டார்கள். ஆனால் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின் நிலைமை அவ்வாறு இல்லை.

ஆயுதப் போராட்ட கால கட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நிலத்தை கட்டுப்படுத்தியது. ஒரு கடலை கட்டுப்படுத்தியது. ஒரு கருநிலை அரசை நிர்வகித்தது. தமிழ் மக்கள் நீண்ட கடல் எல்லையை கொண்டவர்கள். அக் கடல் வழி ஊடாக தாயகமும் டயஸ்போறாவும் இணைக்கப்பட்டன. அந்தக் கடல் வழியூடாக ஆயுதங்கள் வந்தன. ஆட்கள் வந்தார்கள். மருந்து வந்தது. அறிவு வந்தது.

ஆனால் 2009 ஒன்பதுக்குப் பின் தாயகத்தையும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தையும் இறுகப் பிணைக்கும் விதத்திலான இடை ஊடாட்டத் தளங்கள், வழிகள் எவையும் கட்டி எழுப்பப்படவில்லை. மிகக் குறிப்பாக சட்டரீதியாக ஏற்புடைய ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்டமைப்புகள் எவையும் கிடையாது. சில புலம் பெயர்ந்த தன்னார்வ அமைப்புகள் தாயகத்தை நோக்கி உதவிகளை வழங்குகின்றன. தனி நபர்களும் வழங்குகிறார்கள். ஆனால் அரசியல் அர்த்தத்தில் ஒன்றிணைக்கப்பட்ட ஓர் இடையூடாட்டத் தளம் தாயகத்துக்கும் புலம்பெயர் தமிழ் சமூகத்துக்கும் இடையே கிடையாது.

ராஜபக்சக்கள் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தை ஒருவித அச்சத்தோடு பார்த்தார்கள். ஒரு பகுதி அமைப்புகளையும் தனி நபர்களையும் தடைப்பட்டியலில் சேர்த்தார்கள். அதனால் புலம் பெயர்ந்த தமிழ் சமூகம் தாயகத்தோடு நெருங்கி உறவாடுவதில் இடைவெளிகள் அதிகமாக காணப்பட்டன. ஆனால் ரணில் விக்கிரமசிங்க தடைகளை நீக்குகிறார் மட்டுமல்ல, பொருளாதார நெருக்கடியை அடிப்படையாக வைத்து அவர் புலம் பெயர்ந்த தமிழ் முதலாளிகளை தாயகத்தில் முதலீடு செய்யுமாறு அழைக்கிறார்.

அதாவது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையிலான அழைப்பு அது. மாறாக தமிழ் மக்கள் ஒரு தேசம் என்ற அடிப்படையில் ஒரு தேசத்தை கட்டி எழுப்புவதற்கான முதலீடு என்ற அடிப்படையில் புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகளோடு இடையூடாடக் கூடிய விதத்தில் பொருத்தமான கட்டமைப்புகள் எத்தனை உண்டு?

தாயகத்தை நோக்கி உதவிகளைப் புரியும் பெரும்பாலான புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுக்கு இடையே இடையூடாட்டமும் குறைவு. ஒருங்கிணைந்த செயல்பாடும் குறைவு. இதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு கடந்த 13 ஆண்டுகளாக புலம் பெயர்ந்த தமிழ் சமூகம் ஜெனிவாவை எவ்வாறு அணுகுகிறது என்பது தான்.

இவ்வாறு தாயகத்துக்கும் புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்திற்கும் இடையே தாயகத்தை கட்டியெழுப்புவது என்ற ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலான வேலைத்திட்டங்கள் ஒரு மையத்திலிருந்து ஒருங்கிணைக்கப்படாத ஒரு வெற்றிடத்தில், இக் கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டது போல முதலாம் தலைமுறை புலம் பெயரிகள் வயதாகி மறையும் பொழுது தாயகத்துக்கும் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்துக்கும் இடையிலான இடைவெளி மேலும் அதிகரிக்கக் கூடிய ஆபத்து உண்டா?

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த மாவீரர் நாள் அந்த இடைவெளி அப்படி ஒன்றும் பாரதூரமாக இல்லை என்பதை உணர்த்தியது. கடந்த ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் கடந்த மாவீரர் நாள் தாயகத்திலும் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பரவலாகவும் பெருமெடுப்பிலும் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது மாவீரர் நாள் என்ற உணர்ச்சிப் புள்ளியில் தாயகமும் புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒப்பீட்டளவில் ஒன்று திரண்டன .பொதுவாக ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலங்களில் நினைவு கூர்வதற்கான வெளி ஒப்பீட்டளவில் அதிகமாக இருக்கும். மேலும் அரசாங்கம் தமிழ்த் தரப்பை பேச்சு வார்த்தைக்கு அழைத்திருக்கும் ஒரு பின்னணியில், நல்லெண்ணைச் சூழலை உருவாக்க வேண்டிய ஒரு நிர்பந்தமும் அரசாங்கத்துக்கு உண்டு. எனவே உணர்ச்சிகரமான நினைவு நாளை ரணில் ஒப்பீட்டளவில் தடுக்கவில்லை.அதனால், திட்டமிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகளில் பெருமளவுக்கு மக்கள் திரண்டிருக்கிறார்கள். அது தானாக வந்த கூட்டம். அதை யாரும் வாகனம் விட்டு ஏற்றவில்லை. தண்ணீர் போத்தல்,சாப்பாட்டுப் பார்சல், சிற்றுண்டி கொடுத்து அழைத்துக் கொண்டு வரவில்லை.அது தன்னியல்பாகத் திரண்ட ஒரு கூட்டம். அவ்வாறு மக்கள் திரள்வதற்குரிய ஏற்பாடுகளை கட்சிகளும் அரசியல்வாதிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் செய்து கொடுத்தார்கள். அரசியல்வாதிகள் நினைவுநாட்களின் துக்கத்தையும் கண்ணீரையும் வாக்குகளாக ரசாயன மாற்றம் செய்ய வேண்டும் என்ற உள் நோக்கத்தோடு அதைச் செய்யக்கூடும். ஆனாலும் தடைகள் அச்சுறுத்தல்களின் மத்தியில் அவர்கள் முன்வந்து ஒழுங்குபடுத்தும் போது மக்கள் திரள்வார்கள் என்பதே கடந்த 13 ஆண்டு கால அனுபவம் ஆகும்.

13 ஆண்டுகளின் பின்னரும் கண்ணீர் வற்றவில்லை காயங்கள் ஆறவில்லை கோபமும் தீரவில்லை என்பதைத்தான் நடந்து முடிந்த மாவீரர் நாள் உணர்த்தியிருக்கிறது. ஆனால் காலம் ஒரு மிகப் பெரிய மருத்துவர். அது எல்லாக் காயங்களையும் குணப்படுத்தக் கூடியது. நினைவுகளின் வீரியத்தை மழுங்கச் செய்யக்கூடியது. தமிழ் மக்கள் தமது கூட்டுத் துக்கத்தையும், கூட்டுக் காயங்களையும், கூட்டு மனவடுக்களையும் அரசியல் ஆக்கசக்தியாக மாற்ற வேண்டிய ஒரு காலகட்டத்தில் வாழ்கிறார்கள். நீதிக்கான போராட்டத்தின் பிரதான உந்தி விசையே அது தான். நினைவுகூர்தல்




கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -


என்பது நீதிக்கான போராட்டத்தின் பிரிக்கப்படவியலாத ஒருபகுதி.இந்த அடிப்படையில் சிந்தித்தால், காலம் துக்கத்தை ஆற்றுவதற்கு இடையில் துக்கத்தையும் கண்ணீரையும் எப்படி அரசியல் ஆக்க சக்தியாக மாற்றலாம் என்று தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

கடந்த 13 ஆண்டுகளில் காயமும் துக்கமும் ஆறாமல் இருப்பதற்குப் பிரதான காரணம் ஒடுக்குமுறை தான். தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்பதுதான்.மாறாக தமிழ்த் தரப்பின் திட்டமிட்ட செயலூக்கமுள்ள அரசியலின் விளைவாக அல்ல.நடந்து முடிந்த மாவீரர் நாளில் கனகபுரம் துயிலுமில்லத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊடகவியலாளர் ஒருவரிடம் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.. மக்கள் உணர்வோடு இருக்கிறார்கள் அவர்களுக்கு வழிகாட்ட அரசியல்வாதிகளுக்குத்தான் தெரியவில்லை'' என்று. ஒப்பீட்டளவில் அதிக தொகை ஜனங்கள் திரண்ட ஒரு துயிலுமில்லத்தில் வைத்து கூறப்பட்ட வார்த்தைகள் அவை. அது தான் உண்மை. ஒரு கூட்டுத் துக்கத்தை, கூட்டு அரசியல் ஆக்க சக்தியாக மாற்ற வேண்டிய ஒரு மக்கள் கூட்டம், கடந்த 13 ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருக்கிறது?

கூட்டுத் துக்கத்தையும் கூட்டுக் காயத்தையும் பொருத்தமான விதங்களில் பொருத்தமான காலத்தில் அரசியல் ஆக்க சக்தியாக மாற்றவேண்டும். அவ்வாறு மாற்றத் தவறினால், காலகதியில் காயங்கள் இயல்பாக ஆறக்கூடும், துக்கம் இயல்பாக வடிந்துவிடும். நினைவு நாட்கள் நாட்காட்டிகளில் மட்டுமே மிஞ்சியிருக்கும் ஒரு நிலை வரக்கூடும்? தமிழ் மக்கள் காலத்தை வீணாக்கக் கூடாது.




# ரணில் தயாராவது சமாதானத்துக்கா?

**கட்டுரையாளர்:**
**ஈழநாட்டிற்காக கொழும்பில் இருந்து**
**– பார்த்தீபன் –**

இன நெருக்கடியை பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்க்கப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருக்கும் அதே வேளையில், மறு புறத்தில் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான பேச்சுக்களும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இருந்த போதிலும், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கான உறுதியான வாக்குறுதிகள் எதனையும் ஜனாதிபதியால் பெற முடியவில்லை. இது பிறக்கப் போகும் புதிய வருடத்திலும் பொருளாதார நெருக்கடி தொடர்வதற்கான எச்சரிக்கையாகவே உள்ளது.

சர்வதேச ரீதியில் பலமானதாகக் கருதப்படும் ஐந்து நாடுகளின் தூதுவர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்றாகச் சந்தித்துப் பேசியிருக்கின்றார். பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை சிக்கித் தவிக்கும் நிலையில் அதிலிருந்து மீள்வதற்கான உதவிகளைப் பெற்றுக் கொள்வதுதான் இந்தச் சந்திப்பின் நோக்கமாகக் கருதப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியம், பாரிஸ் கிளப் என்பவற்றிடமிருந்து சாதகமான பதில் கிடைத்திருக்கும் நிலையில் இடம் பெற்ற இச்சந்திப்பும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே கருதப்படுகின்றது.

இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், அவுஸ்திரேலிய ஆகிய ஐந்து பிரதான நாடுகளின் தூதுவர்கள் செவ்வாய்கிழமை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார்கள். இந்த ஐந்து நாடுகளும் சர்வதேச ரீதியாக பலமான பொருளாதாரத்தைக் கொண்டுள்ள நாடுகளாக இருக்கும் அதேவேளையில், இலங்கைக்கு அதிகளவுக்கு கடன் உதவிகளைச் செய்திருக்கும் நாடுகள் என்பதும் கவனிக்கத்தக்கது. இதில் அவதானிக்கப்பட்ட மற்றொரு விடயம் சீனத் தூதுவர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருக்கவில்லை.

இலங்கையை அழுத்திக் கொண்டிருக்கும் கடன் நெருக்கடிக்கு பிரதான காரணமாக இருப்பது சீனா தான். இலங்கையின் மொத்தக் கடனில் 50 வீதத்துக்கும் அதிகமானது சீனாவின் கடன் தான். இலங்கை தன்னுடைய கடன்களை மறுசீரமைத்த பின்னரே தமது உதவிகளையிட்டு பரிசீலனை செய்ய முடியும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான நிபந்தனையாக இருக்கின்றது.

அதாவது, இலங்கை செலுத்த வேண்டியுள்ள கடன்களில் ஒரு தொகையை விட்டுக் கொடுப்பதாக கடன் கொடுத்த நாடுகள் உடன்பட வேண்டும். அத்துடன், மிகுதியாகச் செலுத்த வேண்டிய தொகையை மீளளிப்பதற்கான கால எல்லையை நீடிக்க வேண்டும். வட்டியை விட்டுக் கொடுக்க வேண்டும் போன்றவற்றை உள்ளடக்கியது தான் கடன்மறுசீரமைப்பு. இலங்கைக்கு கடன் கொடுத்த நாடுகள் இதனை ஏற்றுக் கொள்ளாத நிலையில் அடுத்த கட்டத்துக்குச் செல்ல முடியாது என்பதுதான் சர்வதேச நாணய நிதியத்தின் நிலைப்பாடு.

இது தொடர்பாக நடை பெற்ற பேச்சுக்களில் சீனா தவிர்ந்த ஏனைய நாடுகள் கடன் மறுசீரமைப்புக்கு உடன்பட்டிருந்தன. சீனா மட்டும் கடன் மறுசீரமைப்புக்கு உடன்படவில்லை. சீனாவைப் பொறுத்த வரையில் இலங்கைக்கு மட்டுமன்றி மேலும் பல நாடுகளுக்கும் அது கடன்களை வழங்கியிருக்கின்றது. இதில் பெரும்பாலானவை வறுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் நாடுகள். இலங்கையின் கடன்களுக்கு மறுசீரமைப்பை வழங்கினால், ஏனைய நாடுகளும் அதேபோன்ற கோரிக்கையை முன் வைக்கும் என்பது தான் சீனாவின் பிரச்சினை. கடன் மறுசீரமைப்புக்கு உடன்பட மறுப்பதற்கு இதனைத்தான் சீனா காரணமாகச் சொல்கின்றது. சீனாவின் இந்த நிலைப்பாடு தான் இலங்கைக்குப்



பெரும் நெருக்கடியைக் கொடுக்கின்றது. இந்தப் பின்னணியில் தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்திலேயே கோ ஹோம் சைனா என்று முழங்கியிருந்தார். யாரைத் திருப்திப்படுத்துவதற்காக அவர் அவ்வாறு கோஷமிட்டிருந்தாலும், அது எந்தளவுக்கு யதார்த்தமானது என்ற கேள்வி இருந்தாலும், இலங்கையின் பொருளாதார நெருக்கடி முடிவுக்கு வருமா என்ற கேள்வி தொடர்வதற்கு ஏதோ ஒரு வகையில் சீனாதான் காரணமாக இருக்கின்றது என்பதை அது பிரதிபலிக்கின்றது.

இந்த நிலையில், பாரிஸ் சொசைற்றி வெளியிட்டுள்ள அறிக்கை தற்போதைய நிலைமையைப் பிரதிபலிக்கின்றது. இலங்கையின் நிதி நெருக்கடிக்கு தீர்வாக, இலங்கையின் கடனுக்கு 10 வருட கால அவகாசம் வழங்கவும், பின்னர் 15 வருட காலத்துக்கு இலங்கையின் கடனை மறுசீரமைக்கவும் பரிஸ் சொசைற்றி முன்மொழிந்துள்ளது. இலங்கையை மீட்டெடுப்பதற்கான செயற்பாட்டில் கடன் வழங்குபவர்கள் பெரும் இழப்பைச் சந்திக்க நேரிடும் என்பதை சுட்டிக் காட்டியிருக்கும் பாரிஸ் சொசைற்றி, ''இலங்கையின் மிகப் பெரிய கடனாளிகளான சீனா மற்றும் இந்தியாவிடம் பாரிஸ் சொசைற்றி அதிகாரபூர்வமாக இந்த முன்மொழிவை முன் வைக்கவில்லை'' எனவும் தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக பரிஸ் சொசைற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில், டிசெம்பரில் அனைத்துலக நாணய நிதியத்திடம் இருந்து கடனைப் பெறுவதற்கு செயற்குழுவின் ஒப்புதலைப் பெற இலங்கை எதிர்பார்த்துள்ளது. ஆனால், சீன அரசாங்கம் அதிகாரபூர்வமாக பேச்சுவார்த்தைகளை தொடங்காததன் காரணமாக டிசெம்பர் காலக்கெடு மிகவும் கடினமாக உள்ளது. எனவே, அனைத்துலக நாணய நிதியத்திடம் இருந்து இலங்கைக்கான கடனுதவிக்கான செயற்குழுவின் அனுமதியை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள கூட்டத்தில் இலங்கை பெற்றுக் கொள்ளும் என நம்பலாம். எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரம் கிட்டும்வரை இலங்கைக்கு அடுத்த மூன்று மாதங்களுக்கு குறுகிய கால நிதி தேவை. இலங்கையில் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு முன்னர் மோசமாகிவிடும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதை விடவும் எச்சரிக்கப் பட்டிருக்கின்றது என்பது தான் பொருத்தமான சொல்லாக இருக்கும்.

பாரிஸ் சொசைட்டியின் அறிக்கை தெளிவாக மூன்று விடயங்களைச் சொல்லியிருக்கின்றது. ஒன்று – இலங்கையின் கடன் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பத்து வருடகால அவகாசம் கட்டாயம் தேவை என்பது முதலாவது. அதாவது, அதற்கு முன்னர் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயன்றால் பாதகமான விளைவுகள் ஏற்படலாம்.

இரண்டாவது, கடன் மறு சீரமைப்புக்கு சீனாவின் ஒப்புதல் அவசியமானது. அது கிடைக்காமல் அடுத்த கட்டத்துக்குச் செல்ல முடியாது.

மூன்றாவது, சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிக்கான அங்கீகாரம் இப்போதைக்கு கிடைக்காது. அதுவரையில் குறுகிய காலக் கடன்களையாவது பெற முடியாமல் போனால், பொருளாதார நிலை மோசமடைந்து இலங்கையில் தற்போது காணப்படும் அமைதி நிலையும் காணாமல் போய்விடும். இந்த மூன்று விடயங்களும் இலங்கையின் தற்போதைய அமைதி நிலை (?) தொடருமா என்ற கேள்வியைத் தான் எழுப்புகின்றது.

இந்த நிலையில்தான் சீனா தவிர்ந்த பலமான பொருளாதாரத்தைக் கொண்டுள்ள ஐந்து நாடுகளின் தூதுவர்களை ஜனாதிபதி அவசரமாக சந்தித்துப் பேசியிருக்கின்றார்.

இதனை விட உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆகியவற்றின் உயர் அதிகாரிகளுடனும் தனியான சந்திப்பு ஒன்றை சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி நடத்தினார். நிதி நிறுவனங்களின் ஒருங்கிணைந்த வேலைத் திட்டம் ஒன்று அவசியம் என்பது இந்த சந்திப்பின் போது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இவை அனைத்தையும் செயற்படுத்த சில மாதங்கள் செல்லலாம். தற்போது சமையல் எரிவாயுவும், பெற்றோல், டீசல் போன்றனவும் ஓரளவுக்கு கிடைப்பதால் நாடு அமைதியாக இருப்பது போல காணப்படுகின்றது. ஆனால், தினசரி இரண்டரை மணி நேர மின் வெட்டும், அதிகரித்துள்ள விலைவாசியும் மக்களை வாட்டி வதைக்கின்றது. மின்வெட்டு நேரம் எட்டு மணி நேரமாக அதிகரிக்கலாம் என்ற அமைச்சரின் எச்சரிக்கையும், நிதி உதவிகள் கிடைப்பதில் ஏற்படும் தாமதமும் இந்த அமைதி நிலை தொடருமா என்ற கேள்வியைத் தான் எழுப்புகின்றது. ஏனெனில் நெருக்கடிகள் அதிகரிக்கும் போது மக்கள் கிளர்ந்தெழுவதை தடுக்க முடியாமல் போகலாம்.

அதனால் தான் ரணில் விக்கிரமசிங்கவும் போராட்டத்தில் ஈடுபட்ட பலரை கைது செய்து சிறையில் அடைத்திருக்கின்றார். பயங்கரவாதத் தடைச் சட்டம் உட்பட, ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவாற்கான சில ஆயுதங்களை கைகளில் எடுத்து வைத்துக் கொண்டு அடுத்த கட்டத்தை எதிர் கொள்ள அவர் தயாராகின்றாரா என்ற கேள்வி எழுகின்றது.

# பஸிலுக்கு எதிராக வெடித்தது போர்

அமெரிக்காவில் இருந்து அண்மையில் நாடு திரும்பிய சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்சவிற்கு எதிராக அந்தக்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் காட்டமாக கருத்து தெரிவித்துள்ளார். இதன்படி நாட்டில் பேரழிவை ஏற்படுத்தி விட்டு ஓடி யொழிந்து கொண்டிருந்த பசில் ராஜபக்ச பொதுவெளியில் சுதந்திரமாக வந்து பேசுவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்த அதிபர் ரணில் விக்ரமசிங்க ஒரு குற்றவாளியென நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

பசில் ராஜபக்ச தற்போது மீண்டும் பொதுவெளியில் பேச ஆரம்பித்துள்ளார். போராட்டக்காரர்கள் அமைதியாக இருப்பதே பசிலின் பேச்சுக்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க நாசிக் கட்சியை பயன்படுத்தி ஜெர்மனியில் ஹிட்லர் தனது ஆட்சியை நிலை நாட்டியது போல இலங்கையின் நெருக்கடி நிலையை பயன்படுத்தி ரணில் விக்ரமசிங்க சிறிலங்கா அதிபராக பதவியேற்றுள்ளார் என சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே டலஸ் அழகப்பெரும இவ்வாறு



தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், சிறிலங்கா நாடாளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றிய ரணில் விக்ரமசிங்க தம்மை ஹிட்லர் போல் சிலர் பார்ப்பதாக தெரிவித்திருந்தார். எனினும் அது மறுக்க முடியாத உண்மை. இலங்கையில் நடைபெறும் அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கும் மக்களை ஜனநாயகமற்ற ரீதியில் கட்டுப்படுத்த சிறிலங்கா அதிபர் முயற்சித்தால் அதனை தமது கட்சி எதிர்க்கும்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை தம்மால் நிவர்த்தி செய்ய முடியுமென சிறிலங்கா அதிபர் ரணில் விக்கிரமசிங்க கூறுகின்ற போதிலும் அது அவரால் முடியாத காரியம எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியல் தீர்வுக்கான சவாலை எதிர் கொள்ள தயாராக இருக்க வேண்டும்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற வகையில் அதிகாரப்பரவலாக்கம் பற்றி அரசாங்கம் பேசத் தொடங்கியுள்ளது. வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதைப் பற்றிப் பகிரங்கமாகப் பேசியுள்ளார். அவருடைய அறிவிப்பின்படி எதிர் வரும் டிசெம்பர் 11 ஆம் திகதி பேச்சுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கேற்றவாறு தமிழ்த்தரப்புகள் ஒருமுகப்பட்டு பேசத் தயாராக வேண்டும் என்று கேட்டுள்ளார் ஜனாதிபதி. மக்களுடைய எதிர்பார்ப்பும் இதுதான். எல்லாக் கட்சிகளும் ஒருமுகப்பட்டு, பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டும் என்பதாகும்.

இதற்கேற்ற மாதிரி, 25.11.2022 கொழும்பில் சம்மந்தனின் வீட்டில் தமிழ்த்தேசிய அடையாளக் கட்சிகள் பலவும் கூடிப் பேசியிருக்கின்றன.

இதைப் போல சிங்களத் தரப்பிலுள்ள கட்சிகளின் நிலைப்பாட்டைப் பற்றியும் ஜனாதிபதி பகிரங்கமாகவே கேட்டுள்ளார். சஜித் பிரேமதாச அன்று பாராளுமன்றத்தில் பிரசன்னமாகியிருக்கவில்லை. அதனால் லஷ்மன் கிரியல்லவே பதிலளித்தார். தலைவர் சஜித்துடன் கலந்து பேசி இதைப் பற்றிச் சொல்வோம் என்றார்.

அதேவேளை பிரதமர் தினேஸ் குணவர்த்தன, இந்த அதிகாரப் பகிர்வுக்குத் தயாரா? என்று லஷ்மன் கிரியல்ல கேள்வி எழுப்பியிருந்தார். ஏனென்றால் கடந்த காலத்தில் அதிகாரப் பகிர்வுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர் தினேஸ் குணவர்த்தன என்ற அடையாளம் அவர் மீது உண்டு. ஆகவேதான் அவரிடம் இதைப் பற்றி திரும்பத் திரும்ப லஷ்மன் கிரியல்ல கேள்வி எழுப்பினார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடத்திலும் கேள்வி எழுப்பப்பட்டது. 13 பிளஸ் வரை செல்லலாம் என்று அறிவித்தவர் மகிந்த ராஜபக்ஸ. அதிகாரப் பகிர்வுக்கு தாம் தயார் என்று கையைக் காட்டித் தம்முடைய சம்மதத்தைத் தெரிவித்தார் மகிந்த. தமிழ்த்தரப்பில் சுமந்திரன், மனோ கணேசன் போன்றோரும் இதற்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர். ஆதரவைத் தெரிவித்தனர் என்று சொல்வதை விட அப்படி நடந்தால் அது நல்லது. மகிழ்ச்சி என்றனர்.

ஆனால், முஸ்லிம்களின் தரப்பில் இருந்து இதைப்ப ற்றிக் கேள்விகள் எழுப்பப்பட்டன. இது குறித்து நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம் மக்களின் பிரச்சினையையும் கவனத்திற் கொள்ள வேண்டும். வடக்குக் கிழக்குப் பிரச்சினை என்பது முஸ்லிம்களையும் உள்ளடக்கியது தான். ஆகவே நிச்சயமாக இதைப் பற்றி நாம் கூடிய கவனமெடுத்துச் செயற்பட வேண்டியுள்ளது. சம்மந்தன் வீட்டில் கூடியிருக்கும் தமிழ்க்கட்சிகள் இதைக் குறித்தும் சிந்திக்க வேண்டும்.

அன்று சபையில் ஜே.வி.பி இருக்கவில்லை. ஏனைய சிறிய கட்சிகளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தெளிவாக இதற்கான பதிலைச் சொல்லவில்லை. ஆனால் சஜித் பிரேமதாக இதற்கான பதிலைப் பின்பு சொல்லியுள்ளார். ஒற்றையாட்சிக்கும் அதிகாரப் பகிர்வு என்றால் அதற்குத் தாம் தயார் என.

இப்பொழுது உள்ள பிரச்சினை, இந்த அதிகாரப் பகிர்வு எந்த அடிப்படையில் நடக்கப்போகிறது? மாகாண சபைகளுக்கான அதிகாரத்தை அதிகரிப்பதன் வழியாகவா? அதாவது 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதா? அல்லது சந்திரிகா குமாரதுங்க பரிந்துமுரத்த நீலன் திருச்செல்வம் உருவாக்கிய தீர்வு யோசனைகளின் வழியாகவா? அல்லது வேறு ஒன்றா?

இதற்குள் 29.11.2022 அன்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, மாவட்ட அபிவிருத்தி சபைகளைப் பற்றிப் பேசியிருக்கிறார். இது 1980 களின் ஆரம்பத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் கொண்டு வரப்பட்ட அதிகாரப் பகிர்வுத் திட்டமாகும். ஆனால், இதனை தமிழர் விடுதலைக்



கூட்டணி ஏற்றாலும் அப்பொழுதே தமிழ்த்தரப்புகள் மறுதலித்தன. அதற்குப் பிறகே 1987இல் மாகாணசபை இலங்கை இந்திய உடன்படிக்கை மூலமாக அறிமுகமாகியது.

எப்படியோ இப்பொழுது ஜனாதிபதி முன்னெடுக்கும் தீர்வுக்கான முயற்சிகளில் இதில் தமிழ்த்தரப்புகள் என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றன? என்பது மிகப் பெரிய கேள்வி. தமிழ்த் தரப்பில் தீவிர நிலைப்பாட்டைக் கொண்ட அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் (கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பு), ஸ்ரீகாந்தா சிவாஜிலிங்கம் போனறோர் என்ன நிலைப்பாட்டை எடுப்பர் என்று தெரியவில்லை. இதுவரையிலுமான அவர்களுடைய மனப்பதிவு ரணில் விக்கிரமசிங்கவை நம்ப முடியாது. இப்பொழுதுள்ளது பொதுஜன பெரமுன அரசாங்கம். ஆகவே அவர்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதாகவே உள்ளது.

ஆகவே எல்லாவற்றுக்கும் அப்பால், ஜனாதிபதியின் அறிவிப்பை நம்பலமா? என்ற கேள்வி தான் இப்பொழுது பெரிதாக முன்னெழுந்து நிற்கிறது. தமிழர்கள் இதைப் பகிரங்கமாகவே பேசுகிறார்கள். ரணில் விக்கிரமசிங்க மிகப் பெரிய தந்திரசாலி. அவருடைய அரசியல் வழிகாட்டியான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைப் போல அதிகார மன நிலை உடையவர். தன்முன்னே உள்ள கட்சிகளை (எதிர்த்தரப்பை) பிரித்து உடைத்துப் பலவீனப்படுத்துவதில் கெட்டிக்காரர். பேச்சுவார்த்தை என்ற போர்வையில் காலத்தைக் கடத்துவதில் சிரத்தையாக இருப்பார் என்பது பலருடைய கருத்து. இதற்குப் பலரும் ஆதாரமாகக் காட்டுவது, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சொன்ன, ரணிலை நம்ப முடியாது. அவர் ஒரு நரி என்பதை.

இதனால், ரணில் விக்கிரமசிங்கவை நம்பி, எப்படி அவருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முடியும்? என்று கேட்கிறார்கள்.

அரசியல் என்பதே அப்படியானது தான் என்பதே இதற்குப் பதில்.

அது நண்பர்களுடன் தேநீர் குடிக்கும் விருந்தல்ல. எதிர்த்தரப்புடன் கவனமாகவும் திறமையாகவும் ஆடப்பட வேண்டிய ஆட்டம் அது. அதற்கேற்ப பல வழிகளிலும் பல முனையிலும் நம்மைத் தயார் செய்ய வேண்டும். அந்தத் தயார்ப்படுத்தலுடன் களத்தில் இறங்க வேண்டும். அப்படி இறங்கினால் நாமும் அரசியலில், நம்முடைய இலக்கில் வெற்றியடைய முடியும்.

இந்தியா, இங்கிலாந்து போன்ற பெரும் நாடுகளும் கிறிக்கெற் போட்டியில் கலந்து கொள்கின்றன. இலங்கை, வங்களாதேஸ் போன்ற சிறிய நாடுகளும் கலந்து கொள்கின்றன. பெரிய நாடுகளின் வீரர்களோடு எப்படி நாங்கள் போட்டியிடுவது என்று எந்த அணியும் சொல்வதில்லை. எந்த வீரரும் பின்னிற்பதில்லை. இங்கே பெரிது சிறிது என்பதல்லப் பிரச்சினை. திறமை,நம்பிக்கை, துணிவு, ஆற்றல், நற்சிந்தனை போன்றவையே முக்கியமாகும்.

ரணில் விக்கிரமசிங்க முதிர்ந்த அரசியல் தலைவர். இலங்கையின் கொந்தளிப்பு மிக்க ஐம்பது ஆண்டு கால அரசியலில் அரை வாசிக் காலத்துக்கும் மேலாக பெரும்பொறுப்பில் இருந்தவர். பேச்சுவார்த்தைகளிலும் உடன்படிக்கைகளிலும் ஈடுபட்டவர். ஆட்சியில் பல நெருக்கடிச் சூழலை எதிர்கொண்டவர். கட்சிக்குள் பல சிக்கல்களைச் சந்தித்தவர். வெற்றி தோல்வி எல்லாவற்றிலும் தாக்குப் பிடித்து நின்றவர். இப்பொழுது ஜனாதிபதியாகியதும் பதவியில் தொடர்ந்து நீடிப்பதும் கூட அவருடைய தனியாற்றலினால்த ான். அல்லது சூழலைத் தனக்கிசைவாக மாற்றிக்கொள்ளும் திறனால். முக்கியமாக எதிர்த்தரப்பையே தனக்கிசைவாக மாற்றிக் கொள்ளும் திறனால். இது இப்போது பொது ஜன பெரமுன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மட்டுமல்ல, கடந்த மைத்திரி — ரணில் நல்லாட்சிக் காலத்திலும் எதிர்க்கட்சியாக இருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தமிழரசுக் கட்சியை — தனக்கிசைவாக வளைத்துப் போட்டிருந்தவர்.

ஆகவே அப்படியானவருடன் பேச்சுக்களில் ஈடுபடுவதென்பது மிகச் சவாலான ஒன்றே. இதைப் புரிந்து கொண்டு, இதற்கு, இதை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டும். அதுவே செய்ய வேண்டியது. ரணிலை விட பத்து அடி பாயக் கூடிய ஆற்றலை பேசச் செல்வோர் வைத்திருக்க வேண்டும். அவர் எப்படிக் காய்களை நகர்த்துவாரோ அதை வெட்டிப் பல காய்களை நகர்த்தக் கூடிய திறனோடிருக்க வேண்டும். அவர் எப்படி உள்ளே கையை விட்டு காரியம் பார்ப்பாரோ அதற்கு இடமளியாமல், அதை முறியடிக்க வேண்டும். அவர் எப்படிப் பிராந்திய சக்தியாக இந்தியாவையும் சர்வதேச சமூகம் என்ற மேற்குலகையும் கையாள்வாரோ அதை விட நுட்பமாக தமிழ் — முஸ்லிம் தரப்புகள் வேகமாக இந்தத் தரப்புகளைக் கையாளக் கூடியதாக இருக்க வேண்டும். அவர் எதிர்பாராத கோணங்களில் விடயங்களை நகர்த்த வேண்டும்.

இதற்கு முற்றிலும் புதிய முறையில் விடயங்களைக் கையாளும் சிந்தனை தேவை. அதாவது புதிய சிந்தனை முறை வேண்டும். அதில் நம்பிக்கை வேண்டும். அந்த நம்பிக்கையில் துணிவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆனால், இப்பொழுது என்ன நடக்கிறது என்றால், ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்கு வருமாறு அழைத்தால், தமிழ்த்தரப்புகள் தொடை நடுக்கம் கொள்கின்றன. தமிழ்த் தரப்பிலுள்ள அரசியல்வாதிகள் மட்டுமல்ல, தமிழ் ஊடகவியலாளர்கள், தமிழ்ப் புத்திஜீவிகள், தமிழ் ஆய்வாளர்கள்


**கட்டுரையாளர்:**
**கிளிநொச்சியில் இருந்து**
**– கருணாகரன் –**




எல்லோருமே தடுமாறுகின்றனர். இந்தப் பலவீனத்தை மறைத்துக் கொள்வதற்காக ரணிலை நம்ப முடியாது. அவர் மிகப் பெரிய தந்திரசாலி என்று சொல்லித் தப்ப முயற்சிக்கின்றனர்.

அரசியல் என்பதே தந்திரோபாயங்கள் நிறைந்தது தான். அதைக் கையாள்வதற்கான சாணக்கியம் வேண்டும். ராசதந்திரம் வேண்டும். புத்திக்கூர்மையான, அதிரடியான நடவடிக்கைகள் வேண்டும். எந்தத் தந்திரசாலியென்றாலும் வரட்டும். அவருடன் விளையாடிக் காட்டுகிறோம் என்ற உற்சாகம் வேண்டும். அதைத் தமிழ் முஸ்லிம் தரப்புகள் வளர்த்துக் கொள்ளட்டும்.

ரணில் விக்கிரமசிங்கவை மடக்கக் கூடிய (முடக்கக் கூடிய அல்ல) உபாயங்களில் முக்கியமானது, இலங்கையின் அரசியலமைப்பில் பல்லினத் தன்மையையும் பன்மைத்துவத்தையும் கொள்ள வைத்தலாகும். ரணில் ஒரு லிபரல்வாதி. மேற்குலகின் நம்பிக்கையை எதிர்பார்ப்பவர். அல்லது அதைத் தக்க வைத்துக் கொள்வதற்கு விரும்புகின்றவர். தன்னை ஒரு சிறந்த ஜனநாயக வாதியாக காட்டுகின்றவர். ஆகவே அதை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மேற்கின் பாணியில் நாம் விடயத்தைக் கையாளலாம்.

இன்னொன்று வழமையான கோரிக்கைகள், வழமையான அணுகுமுறைகளின் வழியாக இந்தப் பேச்சினை அணுக முற்படாமல் வேறு முறையில் தொடருதல். கடந்த 30 ஆண்டுகளாக அரங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் புலிகளே ஈடுபட்டு வந்தனர். அவர்களே யார் யார் பேச்சில் கலந்து கொள்வது? என்னென்ன விடயங்களைப் பேசுவது? அதை எந்த ஒழுங்கில் எப்படிப் பேசுவது? போன்ற எல்லாவற்றையும் தீர்மானித்தவர். இப்பொழுது முதற தடவையாக தமிழ் மிதவாத அரசியற் தரப்பின் கைகளுக்கு வந்துள்ளது. தமிழ்த்தரப்பு இதில் தனியே ஈடுபட முடியாது. முஸ்லிம்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். அப்படி முஸ்லிம்களை இணைத்துக் கொள்வதே அரசுக்கும் ரணிலுக்கும் கொடுக்கும் முதலாவது நெருக்கடியாக இருக்கும். இப்படிப்பல கோணங்கள் உண்டு.

எல்லாவற்றுக்கும் முதலில் எதிர்த்தரப்பைப் பார்த்துப் பயப்படுவதை விடுத்து, துணித்து களமாட முன்வர வேண்டும். ஆயிரமாயிரம் களங்களைக் கண்டவர் தமிழர் என்று பெருமை பேசிக் கொண்டிராமல் துணிந்து யதார்த்த வெளியில் களமாட வேண்டும்.

யார் இதற்கு முதற்குரலை எழுப்புவது?



# புலம் பெயர்ந்த மண்ணில் இருந்து
## தாயக உறவுகளுக்கு பணம் அனுப்பும் உறவுகளுக்கு

தமது உடலுக்குப் பழக்கப்படாத காலநிலையில் நித்திரையைத் துறந்து நிம்மதியைக் குலைத்து தேவைகளை ஹுத்துத் தமது உறவுகளுக்கு புலம் பெயர் தேசத்திலிருந்து தாயகத்திற்குப் பணம் அனுப்புகின்றனர். இங்குள்ளவர் கள் சீரழிந்து போக வேண்டுமென நினைத்து யாரும் பணம் அனுப்புவ தில்லை. பணத்தைப் பெறும் இங்கு ள்ள உறவுகள் தெரிந்தோ தெரியாமலே கிடைக்கும் பணத்தால் சீரழிகின்றனர்.

வெளிநாட்டிலிருந்து வரும் உறவுக ளும் நேரடியாகச் சீரழிக்கின்றனர். சீரழிவுகள் எவை எவை?

01. உள்நாட்டில் கடின உழைப்பு, சேமிப்பு ,சிக்கனம் ஆகியவற்றில் முன் னிலை பெற்ற சமூகம் பல விதங்களில் ஊதாரித்தனம் செய்கின்றனர்.

02. ஒரு செத்த வீட்டுக்கு இரண்டு அந்தியேஸ்டி செய்கின்றனர். 29 நாளில் கீரிமலைக்குச் செல்லும் போது வீட் டில் ஒரு அந்தியேஸ்டி. 31 ஆம் நாளில் வீட்டில் பெரிய அந்தியேஸ்டி.

03. வீடுகளில் மங்கல நிகழ்வுகள் வைப்பது நாகரிகமில்லை. மண்டபத் தில் வைத்தால் தான் ஸ்ரைல் என பெரும்தொகை செலவாகிறது.

04. உள்ளூரில் உள்ளவர்கள் உழைத் துக் காணி வாங்குவதை நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு காணி விலையைப் பல மடங்கு உயர்த்தியு ள்ளனர்.

05. மங்கல நிகழ்வுகளுக்கு போட்டோ, வீடியோ எடுப்பதற்கு சில இலட்சம் காசு செலவாகிறது.

06. அக்சய திருதியை எனும் தங்க நகைச் சடங்கு வருடத்தில் ஒரு நாள் கொடி கட்டிப் பறக்கிறது.

07. கடைகள் கடைத்தொகுதிகளைத் தேவையற்றுக் கட்டி பெரும்பாலும் மூடிய கடைகளாக உள்ளன. இதனால் கோடான கோடி பணம் முடங்கு கிறது.

08. பணம் கிடைப்போர் காட்டும் டாம்பீகங்களால் உள்நாட்டு உழைப்பாளர்கள் தாழ்வுச் சிக்கலுக்குள் ளாகின்றனர்.

09. கற்பாறை பிளந்து மண்வளம் பெருக்கிய விவசாயத் தலைமுறையில் சோம்பேறிகள் பலர் உருவாகி விட்ட னர்.

10. வேலிப் பொட்டுக்குள்ளாலும், கடப்புக்குள்ளாலும் சென்று உயிரும் உணர்வுமாகச் சொந்தக் கொண்டாடிய குடும்பங்கள் மதில்களைக் கட்டித் தனித் தீவாகி விட்டனர்.

11. வேலிகள் அதனுடன் இணைந்த மரங்கள் மூலமாக நிழல், மரக்கறி, பசளை, கால்நடை வளர்ப்பு எனக் கண்ட பயன்களை மதில்கள் விழுங்கி விட்டன.

12. திருமணமாகிக் குழந்தை குட்டி பெற்ற பின்பும் தம்பி என்ன வேலை? நானுங்கோ லண்டனுக்குப் போக ட்றை பண்ணுறன் எனும் புதுத் தொழில் உருவானமை.

13. புலம் பெயர் உறவுகள் யூலை, ஓகஸ்ட் மாதத்தில் வரும் போது உயர்தரப் பரீட்சை, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர் களது கல்வி பாதிப்புறல்.

14. பொருள்கள் வாங்கும் போது விலை பேசாமல் காசைக் கொடுத்து விலைவாசியை உயர வைத்தல்.

15. வான், ஆட்டோ போன்றவற்றை வாடகைக்கு அமர்த்தும் போது அதிக கட்டணங்களைக் கொடுத்து இங்குள்ளோரது வாழ்க்கைச் செல வைக் கூட்டுதல்.

16. இங்கு ஒரு மங்கல நிகழ்வை படு டாம்பீகமாக நடத்தி விட்டுத் தமது நாடு மீண்டு பல வருடங்கள் உழை த்துக் கடனைக் கட்டுதல்.

17. பக்கத்து வீட்டுப் பருவதம் இந்தியா சென்று தான் வைத்தியம் பார்த்தவ. உள்ளூரில் நல்ல வைத்தியம் இருந்தாலும் அது போல என்னையும் இந்தியாவுக்கு அனுப்பு எனத் தாய் பிடிவாதம் பிடித்து மகனைக் கடன் காரனாக்குதல்.

18. மூத்தக்கா மகளின் சாமத்திய வீட்டு க்கு இத்தனை இலட்சம் கொடுத்தனி. எனக்கும் தாவென அடுத்த அக்கா சண்டை போட்டுக் காசு வாங்கி வெளி நாட்டில் உழைப்பவர் வாழ்நாள் முழு வதும் கடன்காரனாகவே வாழ்தல்.

19. கோயில் கும்பாபிசேகத்திற்கு 10 இலட்சம் தருவதாகக் கூட்டத்தில் சொல்லி விட்டேன். உடனே காசை அனுப்பு என வீம்பு காட்டுதல். வெளி நாட்டில் உழைப்பவர் படும்பாட்டை அறியார்.

20. பத்துத் திருவிழாவுக்கு 20 சாறிகள் கட்டி எடுப்புக் காட்டுதல். ஒவ்வொரு திருவிழாவுக்கும் தங்க நகைகளை அழித்து டிசைன் மாற்றிச் செய்தல்.

21. எட்டுக் கூட்ட மேளம் வாண வேடிக்கைக்கு 5 இலட்சம் செலவு எனத் திருவிழாக்களை டாம்பீகமாக் கியமை.

22. திருவிழாக் காலத்தில் 3 நேரம் சாப்பாடு போட்டுப் பக்தர்களைக் கவரும் சில கோயில்களும் உண்டு.

23. கோயிலில் கற்பூரம், விபூதி உள் ளதோ இல்லையோ லவுட் ஸ்பீக்கர் கட்டாயம் இருக்கும். வருடத்தில் பல நாள்கள் ஊரின் அமைதியைக் கெடுத் தல்.

24. ஊரில் வீடற்றோர், மலசல கூட கிணறு வசதிகள் இல்லாத ஏழைகள் இருப்பார்கள். ஆனால் அதைப் பற்றிக் கவலைப் படாமல் பல கோடிக்கு மண்டபங்கள், கோபுரங்கள் கட்டுதல்.

25. செத்த வீட்டுக்கு பாண்ட் அல்லது மேளமெனப் பிடித்து வீதிக்கு வீதி வைத்து அடித்தல். பல ஆயிரம் ரூபா வில் பட்டாசு கொளுத்துதல்.

26. சுடலைக்குப் போனால் கால் போத் தல் சாராயம் தருவார்களாம். வேலை க்குப் போகாமல் செத்த வீட்டுக்குப் போய் சுடலைக்கும் போகும் சில கிராமத்தவர்களும் உண்டு.

27. என்ர பொம்பிளைப் பிள்ளைகளு க்கு வெளிநாட்டிலுள்ள தாய் மாமன் தான் சீதனம் கொடுக்க வேண்டும். கொடுப்பாரென இங்குள்ள தந்தை தாய் சேமிப்பு, சிக்கனம் இல்லாமல் வாழ்தல்.

28. ஏழ்மையில் இருந்த போது இரு ந்த சகோதரத்துவம், பாசம் ஆகியன குறைந்து நீ பெருசா நான் பெருசா வெனப் பனிப்போரும், வெளிப்போரும் நிகழ்த்துதல். குடும்பப் பிரிவினைகள் ஏற்படல்.

29. திருமண நிகழ்வுகளில் தேவையில் லாத மெகந்தி எனும் வட இந்தியப் பழக்கம் புகுந்தமை. அது போலவே வளைகாப்புச் சடங்கும் மெல்லெனப் புகுகிறது. பல இலட்சங்கள் வீணாகக் கரைகிறது.

30. வெளிநாட்டுக்காரரைப் போலத் தாமும் மங்கல நிகழ்வுகள், இதர நிகழ்வுகளை நடத்த வேண்டுமென உள்ளூரவர்கள் புறப்பட்டு வாழ்நாள் கடனாளியாகித் துன்புறுதல்.

31. பட்டினி காலத்தில் எப்பயடா கோயிலில் சாப்பாடு கிடைக்கும் என்றிருந்தார்கள். இப்போது கோயிலில் விசேட பூசை, அன்னதானம் என்றா லும் வீடு தேடிச் சொன்னால் தான் வருவோமென்ற பிடிவாதம்.

32. கோயில் பூசைகளில் பொங்கல், மோதகம், வடை, அவல், சுண்டல் வாங்கக் கூட ஆள்களைத் தேடிப் போக வேண்டிய நிலை.

33. வெளிநாட்டிலிருந்து வருவோர் காட்டும் டாம்பீகங்களைப் பார்த்துப் படிப்பைக் கோட்டை விட்டு வெளி நாட்டுக்கு அனுப்பச் சொல்லிப் பெற் றோரை வற்புறுத்துதல்.

34. வெளிநாட்டிலுள்ளோர் உள்நாட்டில் உள்ளோர் வறுமையைப் போக்க சுய தொழில், வாழ்வாதாரங்களைக் கொடுப் பார்கள். அதனைப் பொறுப்பற்று விரய மாக்குதல். பலரிடம் உதவி கேட்டுப் பணம் பெறும் புது வியாபாரம் உரு வாகியமை.

**தேவநாயகம் தபேந்திரன்**
யாழ்ப்பாணம்

35. கொத்து ,கொக்கோகோலா ஆகிய வற்றுடன் சிலர் போதைப் பொருளும் பாவித்துச் சீரழிவுக்கு உள்ளானமை.

36. ஸ்ரைல் மாற்றி ஸ்ரைல் மாற்றி மோட்டார் சைக்கிள் வாங்கிக் காசை ஊதாரியாக்குதல்.

37. உள்ளூரில் பலவித வேலைகளுக்கு கூலிக்கு ஆள்களைப் பிடிக்க முடியாத நிலை.பிடித்தாலும் தொழில் விசுவாச மில்லை. கூலியும் உச்சம்.

38. சாதாரணமாக வீடு கட்டிய காலம் போய் மாபிள், ரெறோசா தரையில் பதித்தால் தான் மதிப்பார்கள் என்ற மாயை.இல்லாதவரும் எடுப்பெடுத்துக் கடன்காரராதல்.

39. பிரமாண்டமான வீடுகளையும், மாடிகளையும் கட்டி விட்டு இருவர் வாழ்தல்.

40. சின்னத்திரை நாடகங்களுக்கு அடிமையாகி அதன் பாதிப்புகளை உள்வாங்கிச் சீரழிவோருண்டு.

41. தீண்டத் தகாத மதுப் போத்தல்கள் .பாவனை சாதாரணம் எனும் அளவு க்கு வந்தமை.

42. வறுமை சிறுமையைப் பற்றிக் கவலைப்படாமல் வசதியான வீட்டுப் பிள்ளைகள் போலத் தாமும் வாழ வேண்டுமெனப் பெற்றோரைக் கரைச் சல் படுத்துதல்.

43. மதிய உணவின் பின்பாகக் கொக்கோ கோலா குடித்தால் தான் செமிக்குமென்ற புதுப்பழக்கம் சில ரைத் தொற்றிக் கொண்டது.

44. அரச மருத்துவமனைகளின் மதிப் புக் குறைந்து தனியார் மருத்துவ மனைக்குச் செல்லும் பழக்கம்.

45. வீடுகளின் முற்றம் வளவு எல்லாம் கொங்கிறீற் தரையமைத்து தரைக்கீழ் நீர் வளம் குறையச் செய்தல்.

46. உள்ளூரில் காதலித்த பெடியனைக் கைவிட்டு வெளிநாட்டு மாப்பிளைக்கு கழுத்து நீட்டிய சில பெண்களும் உண்டு.

47. வெளிநாட்டுக் காசு இல்லா விட்டால் வாழவே முடியாது என்ற தன்னம்பிக்கைக் குறைவான நிலை கணிசமானோரிடம் வந்தது.

(22ம் பக்கம் பார்க்க)

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்**
**30வது ஆண்டு விழா:-**
**23 ஏப்ரல் 2023**
**“சங்கீத சங்கமம் 2023”**

# தமிழ்க்கட்சிகள் இந்திய மத்தியஸ்தத்தைக் கோர வேண்டும்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



இந்தியாவின் முக்கியத்துவம் தொடர்பில் இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதியிருக்கின்றேன். முள்ளிவாய்க்கால் அவலம் நமது அரசியல் புரிதல் மற்றும் அணுகு முறைகள் தொடர்பில் பலவாறான கேள்விகளை எழுப்பியிருந்தது. இந்த பின்புலத்தில் 'இந்தியா புலிகளை அழித்ததா' என்னும் தலைப்பில், தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் காலச்சுவடு சஞ்சிகையில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தேன்.

அந்தக் கட்டுரையில் பல அரசியல் நண்பர்கள் திருப்தியடையவில்லை. பலர் எனது நட்பையும் துண்டித்துக் கொண்டனர். இன்று காலம் 13 வருடங்களாக நகர்ந்து விட்டது. இப்போது பலரும் புதுடில்லியுடன் எவ்வாறு நெருங்குவதென்று உரையாடி வருகின்றனர். ஒரு காலத்தில் இனிப்பாக நோக்கப்பட்ட இந்தியா என்னும் சொல், பின்னர் கசப்பானது. விடுதலைப் புலிகள் அமைப்பு, இந்திய படைகளுடன் மோதிய பின்னணியில் தான், அது கசப்பானது. அன்றைய சூழலில், இந்தியாவுடன் இணைந்து தான் பயணிக்க வேண்டுமென்று கூறியவர்கள் (துரோகிகளாக்கப்பட்டு) தூற்றப்பட்டனர். ஆனால் காலம் அனைத்தையும் செல்லாக்காசாக்கி விட்டது. காலம் வலியதென்பார்கள். காலம் நமக்கு தரும் அனுபவங்களை எந்தவொரு ஏட்டறிவும் தந்துவிடப் போவதில்லை.

நான் இப்போது, இந்தியா தொடர்பில் பேசுவதற்கு ஒரு வலுவான காரணமுண்டு. அதாவது, ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவருகின்றார். தமிழ் கட்சிகள் அனைத்தும் இணைந்து வந்தால் தான் பேசுவதற்கு தயாராக இருப்பதாகவும் கூறுகின்றார். தமிழ் கட்சிகளின் தலைவர்களும் வழமை போல் சமஸ்டியை உச்சரித்துக் கொண்டிருக்கின்றனர். தமிழ் கட்சிகள் இவ்வாறு தான் பேசுமென்பதும் ரணில் அறியாத ஒன்றல்ல.

ஏனெனில் தற்போதுள்ள தென்னிலங்கை அரசியல்வாதிகளில் ரணில் விக்கிரமசிங்களவிற்கு தமிழர்களின் பிரச்சினையை வேறு எவரும் அறியார். இந்திய-இலங்கை ஒப்பந்த காலத்திலிருந்து, ஒஸ்லோ பேச்சுவார்த்தை வரையில் பயணம் செய்தவர் ரணில். எனவே ரணில் விக்கிரமசிங்க புதிதாக தெரிந்துகொள்வதற்கு எதுவுமில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தான் தமிழ் கட்சிகளை பேச வருமாறு அவர் அழைக்கின்றார்.

தமிழர் அரசியல் வரலாற்றில் ஒரு எளிய உண்மையுண்டு. அதாவது, தமிழர்களும் சிங்களவர்களும் உரையாடி பிரச்சினையை தீர்க்க முடியுமென்றால், தேசிய இனப்பிரச்சினையென்பது, ஒரு பழம் கதையாகியிருக்கும். அரசியல் தீர்வென்பது எப்போதோ முடிந்த காரியமாகியிருக்கும். கடந்த எழுபது வருடங்களுக்கும் மேலாக, தீர்க்க முடியாமல் இழுபட்டுக் கொண்டிருக்கும் பிரச்சினைக்கான தீர்வை, தான் அடுத்த ஆண்டுக்குள் காணப் போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்.

இது தொடர்பில் எந்தவொரு கேள்வியுமில்லாமல் சமஸ்டியடிப்படையில் பேசுவோமென்று தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்கள் கூறுகின்றனர். செல்வநாயகம் காலம் தொடக்கம், பிரபாகரன் காலம் வரையில், பல பேச்சுவார்த்தைகளை நாம் கண்டிருக்கின்றோம். இந்த பேச்சுவார்த்தைகளில் ஒரு பிரதான அம்சமுண்டு. அதாவது, சிங்களவர்களும் தமிழர்களும் பேசி பிரச்சினைகளை தீர்க்க முற்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களும் தோல்வியடைந்திருக்கின்றது.

இந்த இடத்தில்தான் மூன்றாம் தரப்பின் தேவை உணரப்பட்டது. தமிழர் பிரச்சினையில் மூன்றாம் தரப்பினர் தலையீடு செய்த இரண்டு சந்தர்ப்பங்களுண்டு. இதனை இரண்டு கால கட்டங்களாக பிரிக்கலாம். ஒன்று, இந்திய தலையீட்டு காலம். இரண்டு, நோர்வேயின் மத்தியஸ்த காலம். முதலாவது பிராந்தியரீதியான தலையீடாகும். இரண்டாவது மேற்குலக தலையீடாகும். ஏனெனில், நோர்வேயென்பது மேற்குலக சமாதான



முன்னெடுப்புக்களுக்கான முகவர் முகமாகும். இந்த இரண்டு தலையீடுகளுக்கும் ஒரு ஒத்த இயல்புண்டு. இரண்டு தலையீடுகளுமே, தமிழர்கள் ஆயுதரீதியான பலத்துடன் இருந்த காலத்தில் இடம் பெற்ற தலையீடுகளாகும்.

அதே வேளை, ஒரு அடிப்படையான வேறுபாடுமுண்டு. அதாவது, இந்தியா முதலில் தமிழ் இயக்கங்களை ஆயுத ரீதியில் பலப்படுத்தி, அதன் பின்னரே நேரடியாக தலையீடு செய்தது. ஆனால் மேற்குலகோ, ஒரு எல்லை வரைக்கும் விடுதலைப்புலிகளை, இயங்குவதற்கு அனுமதித்து விட்டு, அதன் பின்னரே தலையீடு செய்தது.

அதாவது, விடுதலைப்புலிகள் இலங்கையின் இராணுவத்திற்கு சவால் விடுக்கக் கூடிய நிலையிலிருந்த காலத்தில் தான், நோர்வேயின் தலையீடு நிகழ்ந்தது. இதில் பிறிதொரு விடயமுண்டு. அதாவது, ராஜீவ்காந்தியின் கொலைக்கு பின்னர், விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவில் தடை செய்யப்பட்டது. ஆனால் மேற்குலகத்தில் தடை செய்யப்படவில்லை. 1990 களுக்கு பின்னர், விடுதலைப் புலிகள் அமைப்பு ஐரோப்பிய ஜனநாயக சூழலை பயன்படுத்தியே தங்களை வளர்த்துக் கொண்டது. ஆரம்பத்தில் தமிழ்நாடு தான், விடுதலைப் புலிகளுக்கான பின்தளமாக இருந்தது. பின்னர், அது ஐரோப்பாவாக மாறியது.

இந்த பின்புலத்தில் நோக்கினால், 90களுக்கு பின்னரான விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கு மேற்குலகத்தின் நெகிழ்வான அணுகுமுறையே பிரதான காரணமாகும். 1997இல், அமெரிக்கா விடுதலைப் புலிகள் இயக்கத்தை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக தடை செய்த போதிலும் கூட, 2006இல் தான், ஐரோப்பிய ஒன்றியம் புலிகளை தடை செய்தது. கனடாவும் 2006இல் தான் தடை செய்தது. அமெரிக்காவில் புலிகள் தடை செய்யப்பட்ட போதிலும் கூட, அமெரிக்காவின் வெளிவிவகார கொள்கையின் கடைக்கண் பார்வைக்குள் இருக்கும் கனடாவில், விடுதலைப் புலிகள் தடைசெய்யப்படவில்லை. அமெரிக்கா எண்ணியிருந்தால், கனடாவிலும் விடுதலைப் புலிகளை ஆரம்பத்திலேயே தடை செய்திருக்க முடியும்.

இந்த பின்னணியில் நோக்கினால், மேற்குலகம் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியை தடுக்க முயற்சிக்கவில்லை. மாறாக, ஒரு எல்லை வரையில் வளர்வதற்கு அனுமதித்திருந்தது. இதற்கு பிறிதொரு காரணமும் உண்டு. அதாவது, விடுதலைப் புலிகள் இயக்கம் கருத்தியல்ரீதியில் மேற்குலகிற்கு எதிரான நிலைப்பாடுடையதல்ல. ஒரு வேளை விடுதலைப் புலிகள் அமைப்பானது, ஒரு இடது சாரி இயக்கமாக தன்னை முன்னிறுத்தியிருந்தால், மேற்குலகம் விடுதலைப் புலிகளுக்கு இவ்வாறான சலுகையை வழங்கியிருக்காது. இந்த பின்புலத்தில் நோக்கினால், தங்களுடைய நெகிழ்வான அணுகுமுறைகளால் வளர்சியடைந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தை, ஜனநாயக நீரோட்டத்திற்குள் கொண்டு வருவதற்கானதொரு முயற்சி யாகவே நோர்வேயின் தலையீட்டை நாம் நோக்க வேண்டும். அப்படி நோக்குவது தான் சரியாகவும் அமையும்.

அதே வேளை இந்திய தலையீட்டிற்கும் நோர்வேயின் முகவர் தலையீட்டிற்கும் இடையில் ஒரு கொள்கை சார்ந்த உடன்பாடுண்டு. அதாவது, இரண்டு தலையீடுகளுமே தமிழ் மக்களுக்கான தனிநாட்டை ஆதரிக்கும், அங்கீகரிக்கும் நிலைப்பாட்டை கொண்டிருக்கவில்லை. மாறாக அதற்கு மாற்றான அரசியல் தீர்வொன்றை காண்பதற்கான தலையீடாகவே இருந்தது. பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததை தொடர்ந்து, நோர்வேயின் பெறுமதி இல்லாமல் போய் விட்டது. இப்போது ரணில்-பிரபா உடன்பாடு ஒரு விடயமல்ல.

ஏனெனில் பிரபாகரனும் விடுதலைப் புலிகள் அமைப்பும் இல்லை. ஆனால் இந்திய-இலங்கை ஒப்பந்தம் இப்போதும் எப்போதும் விடயமாகவே இருக்கும். ஏன்? ஏனெனில், அது இரண்டு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான், இந்தியா தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் வலியுறுத்தி வருகின்றது. அதே வேளை, தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவரும் ஒரேயொரு நாடும் இந்தியா மட்டும் தான்.

எனவே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேசப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் இந்தியாவின் தலையீடு தவிர்க்க முடியாதது. தவிர்க்கவும் கூடாது. ஆனால் இந்த விடயத்தை சரியாக புரிந்து கொண்டு தமிழ் தேசிய கட்சிகள் செயற்படவில்லை. ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில், சம்பந்தன்-சுமந்திரன் தரப்பு, திட்டமிட்டே இந்தியாவை தவிர்த்துக் கொண்டது. இதற்கு சொல்லப்பட்ட காரணம், இந்தியாவிடம் சென்றால் சிங்களவர்கள் கோபிப்பார்கள். இதன் காரணமாகவே, சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சந்தர்பத்தில், ஒரு முறை கூட, புதுடில்லிக்கு பயணம் செய்யவில்லை. இறுதியில் அரசியல்யாப்பு முயற்சிகள் படுதோல்வியடைந்தன. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தியாவின் மேற்பார்வையில் விடயங்களை கையாண்டிருந்தால், இருக்கும் நிலையிலிருந்து முன்னோக்கி சென்றிருக்கலாம். முன்னர் செய்த அதே தவறையே இப்போதும் தமிழ் தேசிய கட்சிகள் என்போர் செய்கின்றனர். இங்கு கருத்தூன்றி கவனிக்க வேண்டிய விடயமொன்றுண்டு. அதாவது, சமஸ்டியடிப்படையில் பேசுவதானால் இந்தியாவின் தலையீடு நிகழாது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலிருந்து முன்னோக்கி பயணிப்பதாயின், இந்தியாவினால் தலையீடு செய்ய முடியும். இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி. ஜெயசங்கர், கூட்டமைப்புடனான சந்திப்பின் போது, முன்னர் ஒரு முறை இதனை கூறியுமிருக்கின்றார்.

ஏன் மூன்றாம் தரப்பொன்றின் தலையீடு கட்டாயமானது. இந்தக் கட்டுரை மூன்றாம் தரப்பு என்பதால் இந்தியாவை மட்டுமே குறிப்பிடுகின்றது. இந்தியாவல்லாத எந்தவொரு நாட்டின் தலையீடும் தமிழர் விடயத்தில் சாதகமான பங்களிப்பை வழங்க முடியாது. பங்களிப்பு என்பதற்கும் சாதகமான பங்களிப்பு என்பதற்குமான வேறுபாடு கனதியானது. முன்னர் இடம்பெற்ற மூன்றாம் தரப்பின் தலையீட்டிற்கும் இப்போது இந்தக் கட்டுரையாளர் குறிப்பிடும் இந்திய தலையீட்டிற்கும் அடிப்படையான வேறுபாடுண்டு.

இந்த கட்டுரையில் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, முன்னர் இடம்பெற்ற இரண்டு தலையீடுகளும் தமிழர்கள் ஆயுத பலத்துடனிருந்த காலத்தில் இடம்பெற்ற தலையீடுகளாகும். அந்தத் தலையீடுகளின் போது, தமிழர்களுக்கு வலுவான குரலிருந்தது. தமிழர்களால் விடயங்களை அழுத்தி வலியுறுத்த முடிந்தது.

ஆனால் இப்போதைய நிலைமை தலைகீழானது. தமிழர்கள் முற்றிலும் பலமற்றவர்களாக இருக்கும் சூழலில் தான் கொழும்புடன் பேச வேண்டியிருக்கின்றது. இந்தப் பேச்சுவார்த்தையில் சிங்கள தரப்பே எப்போதும் பலமாக இருக்கும். தமிழர்கள் விடயங்கள் கூறினாலும் அதனை செய்யவேண்டுமென்னும் நிர்பந்தம் அவர்களுக்கில்லை. அப்படியிருப்பதாக சிலர் கூறலாம். ஆனால் உண்மையான நிலைமை அப்படியல்ல. தமிழர் பிரச்சினைக்கான தீர்வை கண்டால் தான், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உதவுவோமென்று எந்தவொரு நாடும் நிபந்தனைகளை முன்வைக்கவில்லை. அப்படி அவர்கள் கூறப் போவதுமில்லை. இராணுவத்தை குறைக்குமாறு நாடுகள் நிபந்தனைகளை முன்வைத்ததாக நம்மில் சிலர் கூறிக்கொண்டிருக்கும் போதுதான், பொருளாதார நெருக்கடிக் காலத்திலும் கூட, பாதுகாப்பிற்கு அதிக நிதியொதுக்கப்பட்டிருக்கின்றது. எனவே அரசுகளுக்கிடையிலான உறவுகளை மிகவும் எளிமையாக விளங்கிக்கொள்வது தவறானது.

பேச்சுவார்த்தைகளின் போது, ஒரு தரப்பு மிகவும் பலவீனமாக இருந்தால், ஒரு மூன்றாம்தரப்பிடமிருந்து அதிகாரத்தை கடன்பெறும் அணுகுமுறையுண்டு. இது ஒரு முரண்பாட்டு தீர்விற்கான அணுமுறையாக சொல்லப்படுகின்றது. இந்த கோட்பாட்டின் அடிப்படையில் கூறுவதானாலும் கூட, பலவீனமான நிலையிலிருக்கும் தமிழர்கள், ஒரு மூன்றாம் தரப்பின் மேற்பார்வையின்றி (21ம் பக்கம் பார்க்க)

# ஸ்கொட்லாந்தும் சுயநிர்ணய உரிமையும்

- சதீஷ் கிருஷ்ணபிள்ளை -

மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் ஒவ்வொரு கட்டமைப்புக்களும் முக்கியமானவை. இந்த கட்டமைப்புக்கள் மனிதர்களை இனம், மதம், சாதி, சமூகம், கலாசாரம், பாரம்பரியம், நாடு, நாடுகளின் கூட்டமைப்பு போன்ற அலகுகளின் அடிப்படையில் வகைப்படுத்தின.

இந்த கட்டமைப்புக்கள் அதிகாரங்களின் அடுக்கை ஏற்படுத்தின. ஒவ்வோர் அலகிலும் அதிகாரம் படைத்தவர்கள் மேலும், அதிகாரம் குறைந்தவர்கள் கீழே இருப்பார்கள்.

இங்கு யார், என்ன செய்யலாம் என்பதை ஒருவர் தீர்மானிப்பார். மற்றவர், அதற்கு கட்டுப்பட வேண்டும். அதுவே நிர்ப்பந்தம்.

அந்த நிர்ப்பந்தம் மரபுகள், பழக்க வழக்கங்கள், கட்டுப்பாடுகள் ஊடாக பிரயோகிக்கப்படும். சமூகங்கள், நாடுகள் போன்ற அலகுகளில் சட்ட திட்டங்கள் வாயிலாகவும் பிரயோகிக்கப்படலாம். அலகு எத்தகையதாக இருந்தாலும், சமமாக வாழ வேண்டும் என்ற அவா ஒவ்வொருவருக்கும் பொதுவானது.

அதன் அடிப்படையில் எனக்குரிய அந்தஸ்தை நான் தீர்மானிக்க, நான் மற்றவரின் அனுமதியை அல்லது தலையசைவை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டுமா என்ற கேள்வி எழலாம். அந்தக் கேள்வியில் எழும் கோபம் கட்டுப்பாடுகளை தகர்க்கலாம். அதிகார அடுக்குகளை உடைத்துச் செல்ல தலைப்படலாம். எனவே, ஒரு சமூகமாக இருந்தாலென்ன, நாடாக இருந்தாலென்ன, அதன் சுயநிர்ணய உரிமை என்பது சுயகௌரவத்துடன் சம்பந்தப்பட்டது.

இந்த சுயநிர்ணய உரிமை என்பது சகலரும் சமமானவர்கள் என்ற சமூக நீதிக்கமைய சுயகௌரவம் என்ற அடிப்படை உணர்வில் இருந்து எழுகிறது. சுயநிர்ணய உரிமை பற்றிய வியாக்கியானங்கள் எப்போதுமே சர்ச்சைக்குரியவை.

ஒருவர் அடக்குமுறையை எவ்வாறு நோக்குகிறார் என்பதன் அடிப்படையில் சுயநிர்ணய உரிமை பற்றிய அவரது வியாக்கியானங்கள் மாறலாம்.

கடந்த வாரம் ஐக்கிய இராச்சியத்தின் உச்ச நீதிமன்றம் ஸ்கொட்லாந்து விவகாரத்தில் அளித்த தீர்ப்பைப் போல இங்கிலாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகியவற்றையும் உள்ளடக்கிய ஐக்கிய இராச்சியத்தின் அடுத்த பாகம் தான் ஸ்கொட்லாந்து.

ஒரு காலத்தில் சுயாதீனமாக இருந்த நாடு. சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக இங்கிலாந்துடன் போர் புரிந்த நாடு. தமது நாட்டின் ஆறாவது ஜேம்ஸ் மன்னன் இங்கிலாந்தின் மன்னராக மாறிய சந்தர்ப்பத்தில் இங்கிலாந்துடன் கூட்டு சேர்ந்த தேசம்.

1707இல் இரு நாடுகளும் அரசியல் ரீதியாக கூட்டு சேர்ந்து பெரிய பிரித்தானியா என்ற தனியொரு இராச்சியமாக மாறவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது.

ஸ்கொட்லாந்து மக்கள் தனித்துவமானவர்கள். அவர்களது வாழ்க்கை முறை பிரித்தானிய மக்களிடமிருந்து வித்தியாசமானது. நாம் ஏன் இன்னொரு நாட்டுக்குள் வாழ வேண்டும்? நாம் பழையபடி ஸ்கொட்லாந்து தேச மக்களாக இருக்கலாமே என்ற பேரவா அந்த நிலப்பரப்பை சேர்ந்த மக்களுக்குண்டு.

இந்தப் பேரவா ஸ்கொட்லாந்தின் சுயாட்சிக்கான அரசியல் இயக்கங்களுக்கு வித்திட்டது. ஆரம்பத்தில் அதிகாரத்தை பரவலாக்கிக்கொள்ளும் கோரிக்கைகள், கருத்துக் கணிப்புக்கள் ஊடாக அங்கீகரிக்கப்பட 1999இல் ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்துக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.



ஐக்கிய இராச்சியம் என்ற கட்டமைப்புக்குள் இருந்து விடுபட வேண்டும் என்று ஸ்கொட்லாந்து மக்கள் கொண்டிருந்த அவாவுக்கு அதிகாரப் பரவலாக்கல் நிரந்தர பரிகாரமாக அமையவில்லை. சுதந்திரத்தை வலியுறுத்திய ஸ்கொட்லாந்து தேசிய கட்சியை இரு தேர்தல்களில் ஆதரித்தன் மூலம் ஸ்கொட்லாந்து மக்கள் சுயநிர்ணய உரிமையில் தமக்குள்ள விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள்.

எனினும், 2014இல் ஸ்கொட்லாந்து சுதந்திர நாடாக மாற வேண்டுமா என்ற கேள்வியின் அடிப்படையில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டபோது 53 சதவீதமான மக்கள் தேவையில்லை என்றே வாக்களித்தார்கள்.

அதன் பின்னர் நிலைமை மாறியது. ஐரோப்பிய ஒன்றியம் என்ற கூட்டுக் குடும்பத்தில் இருந்து 'பிரெக்ஸிட்' வாக்கெடுப்பின் மூலம் ஐக்கிய இராச்சியம் வெளியேறுவதென தீர்மானித்த போது ஸ்கொட்லாந்து மக்களின் எண்ணமும் பெருமளவில் மாறியது.

இந்த எண்ணம் 2021ஆம் ஆண்டு இடம்பெற்ற ஸ்கொட்லாந்து பாராளுமன்றத் தேர்தலில் வலுவாக வெளிப்பட்டது. ஸ்கொட்லாந்துக்கு சுதந்திரம் வேண்டுமென்ற பிரசாரத் தொனிப் பொருளுடன் களமிறங்கிய தேசியக் கட்சிகள் அமோக வெற்றியீட்டின.

இதனை தொடர்ந்து மக்களின் நேரடிக் கருத்தை அறிய மற்றொரு கருத்துக் கணிப்பை நடத்தலாமே என்று ஸ்கொட்லாந்து தேசிய கட்சியின் தலைவியும் முதலமைச்சருமான நிக்கோலா ஸ்டர்ஜியோன் தீர்மானித்தார்.

தனியொரு தேசமாக இருந்த ஸ்கொட்லாந்து இங்கிலாந்துடன் சேர்ந்து பெரிய பிரித்தானியாவாக மாறிய சமயம், சில அரசியல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் பிரகாரம், பிரிந்து செல்வது பற்றி ஸ்கொட்லாந்து தனியே தீர்மானிக்க முடியாது. அதன் அடிப்படையில் தான் ஐக்கிய இராச்சியத்தின் உச்சநீதிமன்றத்தில் ஸ்கொட்லாந்தின் சுதந்திரக் கருத்துக் கணிப்பு பற்றி வழக்கு தொடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தின் அனுமதியின்றி ஸ்கொட்லாந்து சுதந்தர கருத்து க்கணிப்பு வாக்கெடுப்பை நடத்த முடியாதென கடந்த வாரம் தீர்ப்பளித்துள்ளது.

அதாவது அரசியல் யாப்பு விவகாரங்கள் ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டவை என்பது உச்சநீதிமன்றத்தின் துணிபு. இந்த வழக்கில் கேள்விக்கு உட்படுத்தப்பட்ட அடிப்படை விடயம், ஸ்கொட்லாந்தின் சுயநிர்ணய உரிமை.

1707இல் ஸ்கொட்லாந்தும் இங்கிலாந்தும் ஒன்றிணைந்த போதும், அதற்குப் பின்னர் 1998இல் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டபோதும் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்கள் உண்டு.

இவற்றின் பிரகாரம், சுகாதாரம், கல்வி முதலான விடயங்கள் பற்றிய சட்டங்களை ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் இயற்றலாம். எனினும், சுதந்திர கருத்துக்கணிப்பு நடத்துவது முதலான சமாச்சாரங்கள் ஐக்கிய இராச்சிய பாராளுமன்றத்துக்கு உரியவை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

இந்த வழக்கு விசாரிக்கப்பட்ட போது ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி சுயநிர்ணய உரிமை பற்றிய வாதத்தை முன் வைத்தது. இந்த விடயம் பற்றிய உள்ளூர் சட்டங்களுக்கு வியாக்கியானம் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் 'சுய-நிர்ணய' உரிமை பற்றிய சர்வதேச சட்டங்களுக்கு ஏற்புடையதாக இருக்கத்தக்க வகையில் வியாக்கியானம் கொடுக்க வேண்டும் என்று ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி வாதிட்டது.

ஐக்கிய இராச்சிய நீதிமன்றமோ தமது தீர்ப்பில் கியூபெக் மாநிலம் தொடர்பான வழக்கொன்றில் கனடிய உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை உதாரணம் காட்டியது.

சுயநிர்ணய உரிமை பற்றிய விவாதங்கள் காலனித்துவ ஆட்சி அல்லது வெளிநாட்டு ஆதிக்கம் சம்பந்தப்பட்ட நிலைமைகளுக்கு மாத்திரமே பொருந்தும் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதாவது காலனித்துவ ஆட்சியின் மூலம் அல்லது வெளிநாட்டு ஆதிக்கத்தின் மூலம் ஒடுக்கப்பட்டவர்கள் என்ற பிரிவினருக்கே 'சுய-நிர்ணய' உரிமை பற்றி வாதிட உரிமை உண்டு என்பது போன்ற தீர்ப்பு அதுவாகும்.

ஸ்கொட்லாந்து இங்கிலாந்தின் காலனித்துவ தேசமாக இருக்கவில்லை இங்கிலாந்தின் மூலம் ஒடுக்கப்படவில்லை என்பது உண்மை தான். இருந்த போதிலும், ஐக்கிய இராச்சியம் என்ற கட்டமைப்புக்குள் தாம் கூடுதலாக சம்பாதித்த போதும் இங்கிலாந்து மக்களை விடவும் கூடுதலாக வரி செலுத்தி சலுகைகளை இழப்பதாக ஸ்கொட்லாந்து மக்கள் உணர்கிறார்கள். இது பாரபட்சம் என்று கருதுகிறார்கள்.

ஐரோப்பிய ஒன்றியம் என்ற கூட்டுக் குடும்பத்தில் இருந்து ஐக்கிய இராச்சியம் பிரிந்து செல்வது என்பது பொதுத் தீர்மானமாக இருந்தாலும், கூட்டுக் குடும்பத்தின் சலுகைகளை ஸ்கொட்லாந்து மக்கள் அனுபவிக்க விரும்புகிறார்கள். எனவே, ஐக்கிய இராச்சியத்தில் இருந்து பிரிந்து செல்ல வேண்டும் என ஸ்கொட்லாந்து மக்கள் விரும்பினால், அதைப் பற்றி சமகால அரசியல் பொருளாதார சூழ்நிலைகளின் (21ம் பக்கம் பார்க்க)


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# சீனாவின் நகர்வும் றோவும்



கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இந்தியாவின் வெளியகப் புலனாய்வுப் பிரிவான றோவின், தலைவர் சமந்த் குமார் கோயல் இலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரச தரப்பினரையும், பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஷில் ராஜபக்ஷவையும் சந்தித்ததாக கூறப்படும், கடந்த 21ஆம் திகதி திங்கட்கிழமை, சீனா ஒரு முக்கியமான கூட்டத்தை நடத்தியிருந்தது.

யுனான் மாகாணத்தில் உள்ள குன்மிங் நகரில் நடந்த அந்தக் கூட்டத்தில், இலங்கை மற்றும் இந்தோனேஷியா, பாகிஸ்தான், மியான்மர், பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம், ஆப்கானிஸ்தான், ஈரான், ஓமான், தென்னாபிரிக்கா, கென்யா, மொசாம்பிக், தன்சானியா, சீஷெல்ஸ், மடகாஸ்கர், மொரிஷியஸ், ஜிபூ ட்டி, ஒஸ்ரேலியா உள்ளிட்ட 19 நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் 3 சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

`பகிரப்பட்ட அபிவிருத்தி: நீலப் பொருளாதாரத்தின் பார்வையில் இருந்து கோட்பாடு மற்றும் நடைமுறை என்பது தான் அந்தக் கூட்டத்தில் தலைப்பு.

இந்தியப் பெருங்கடல் நாடுகளை மையப்படுத்தி சீனா நடத்தியுள்ள இந்த முதலாவது கூட்டத்துக்கு இந்தியா அழைக்கப்படவில்லை.

சீன வெளியுறவு அமைச்சுடன் தொடர்புடைய அமைப்பான சீன சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு நிறுவனம் தான் இந்த கூட்டத்தை நடத்தியிருக்கிறது.

இந்தியாவுக்கான தூதுவராகவும், உதவி வெளிவிவகார அமைச்சராகவும் முன்னர் பணியாற்றியிருந்த லூவோ சாவோஹி (Luo Zhaohui) இந்த அமைப்பின் தலைவராக இருக்கிறார்.

வெளிநாட்டு உதவிக்கான மூலோபாய வழிகாட்டுதல்கள், திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குதல், முக்கிய வெளிநாட்டு உதவி விவகாரங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல், வெளிநாட்டு உதவி சம்பந்தப்பட்ட விடயங்களில் நாட்டின் சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்வது மற்றும் முக்கிய திட்டங்களைக் கண்டறிதல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவை இந்த அமைப்பின் நோக்கங்களாக கூறப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி நடந்த இந்த அமைப்பின் கூட்டத்தில், சீனாவிற்கும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கும் இடையே கடல்சார் பேரழிவு தடுப்பு மற்றும் தணிப்பு ஒத்துழைப்பு பொறிமுறையை நிறுவ, சீனா முன்மொழிந்துள்ளது என்றும், தேவைப்படும் நாடுகளுக்கு தேவையான நிதி, பொருள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்க சீனா தயாராக உள்ளது என்றும் குறித்த அமைப்பின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்தியப் பெருங்கடலில் சீனாவின் ஆதிக்க விரிவாக்கத்தைக் கலக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் நாடு இந்தியா.

இந்தியப் பெருங்கடலின் முக்கியமான நாடாக விளங்கும் இந்தியாவைப் புறக்கணித்து, சீனா இந்தக் கூட்டத்தை நடத்தியிருக்கிறது. அதில் இலங்கையும் பங்கேற்றிருக்கிறது.

ஏற்கனவே, கடந்த ஆண்டு, இந்தியாவைப் புறக்கணித்து, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட சில தெற்காசிய நாடுகளுடன் கொரோனா தடுப்பூசி ஒத்துழைப்பு குறித்து சீனா ஒரு கூட்டத்தை நடத்தியிருந்தது.

அதற்குப் பின்னர், சீனா இப்போது, 19 இந்தியப் பெருங்கடல் நாடுகளை இணைத்து, ஒரு கூட்டத்தை நடத்தியிருக்கிறது. இந்தியப் பெருங்கடலில் இதுவரையில் கடல்சார் மீட்பு, தேடுதல், பேரழிவு தடுப்பு நடவடிக்கைகளில் இந்தியாவே பிரதான பாத்திரத்தை வகித்துள்ளது. இப்போது, சீனா இதற்கெனத் தனியானதொரு பொறிமுறையை நிறுவும் ஆலோசனையை முன் வைத்திருப்பதுடன், இதற்குத் தேவையான நிதி, பொருள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கிறது.

ஏடன் வளைகுடாவில், சோமாலியக் கடற் கொள்ளையர்களின் நடவடிக்கைகளைக் காரணம் காட்டி அங்கு பயணிக்கும் சீனக் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவது என்ற போர்வையில் தான், இந்தியப் பெருங்கடலின் மேற்குப் புறத்துக்குள், சீனா முதலில் நுழைந்தது.

ஆரம்பத்தில் தமது போர்க் கப்பல்களின் அணியை நிறுத்தி, பின்னர் நீர்மூழ்கிகளை அனுப்பி இப்போது, ஜிபூ ட்டியில் விநியோகத்தளம் ஒன்றையும் அமைத்து விட்டது. ஏதோ ஒரு காரணத்தை முன்வைத்து உள்ளே நுழைவது சீனாவின் திட்டத்தின் முதல் கட்டம்.

இந்தியப் பெருங்கடலின் மையத்துக்குள் நுழைவதற்கு, சீனா இப்போது கடல்சார் பேரழிவுத் தடுப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கையை காரணமாக கையில் எடுத்திருக்கிறது.

இதன் ஊடாக இந்தியப் பெருங்கடலுக்குள் வலுவான பிரசன்னத்தை உருவாக்கிக் கொள்வதற்கு சீனா முயற்சிக்கிறது.

கடந்த ஜனவரியில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி, இந்தியப் பெருங்கடல் தீவு நாடுகளின் அபிவிருத்திக்கான அமைப்பு ஒன்றை நிறுவுவதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், கடந்த 21ஆம் திகதி நடந்த கூட்டம், அந்த அமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் தொடர்பு பட்டதாக இருக்கவில்லை என்று சீன வெளிவிவகார அமைச்சு கூறியிருக்கிறது.

அமெரிக்கா தனது பாதுகாப்பு மூலோபாயக் கொள்கையில் இந்தோ- பசுபிக்கிற்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்த பின்னர், சீனாவும் அதில் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறது.

கடந்த நவம்பர் 29ஆம் திகதி அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களமான பென்டகன், சீனவின் இராணுவ மற்றும் பாதுகாப்பு முன்னேற்றங்கள் – 2022'' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில், கம்போடியாவின் றீமில் சீனா தற்போது கொண்டுள்ள இராணுவத் தள வசதியை, தனது முதல் இந்தோ – பசிபிக் கடல்கடந்த தளமாக சீனா விரிவுபடுத்தும் என்று கூறப்பட்டிருக்கிறது. அத்துடன் இலங்கை, கம்போடியா, மியான்மர், தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கென்யா, சீஷெல்ஸ், ஈக்குவடோரியல் கினியா, தன்சானியா, அங்கோலா மற்றும் தஜிகிஸ்தான் போன்ற இடங்களை சீனா, இராணுவ தளபாட விநியோக வசதிகளுக்கான இடங்களாக வைத்திருக்கும் வாய்ப்புகள் உள்ளதாகவும், பென்டகன் கணித்திருக்கிறது.

நமீபியா, வனூட்டு மற்றும் சொலமன் தீவுகளில் தளங்களை அமைக்க ஏற்கனவே ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும், சீனாவிலிருந்து ஹோர்முஸ் நீரிணை, ஆபிரிக்கா மற்றும் பசுபிக் தீவுகள் வரை, இராணுவ ஆதிக்கத்தை பேணுவதில் சீனா மிகவும் ஆர்வமாக உள்ளது என்றும் பென்டகன் தெரிவித்துள்ளது.

நமீபியாவில், ஏற்கனவே சீனாவின் மூலோபாய ஆதரவுப் படை விண்வெளிப் பயணங்களுக்கு உதவுகின்ற வகையில், ஒரு கண்காணிப்பு, மற்றும் கட்டளை மையத்தை வைத்திருக்கிறது என்பதையும் அமெரிக்கா சுட்டிக்காட்டியிருக்கிறது.

இந்தியப் பெருங்கடலின் மீதான சீனாவின் ஆர்வம் அதிகரித்து வரும் நிலையில், இலங்கையையும் ஒரு பகுதியாக சீனா சேர்த்துக் கொண்டுள்ள நிலையில், இந்த ஒத்துழைப்புக் கூட்டில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ள இந்தியாவினால் அமைதியாக இருக்க முடியாது.

சீனாவின் படைபலம் அதன் ஆளணியால் தீர்மானிக்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது. இப்போது, தொழில்நுட்பம், மூலோபாய உத்திகளின் ஊடாக சீனா முதல் நிலையை அடைய முயற்சிக்கிறது.

சீனாவின் விண்வெளி, ஏவுகணை, தொழில்நுட்பங்களும், அணுவாயுத ஆற்றலும், கடற் போர்க்கலன்களின் பெருக்கமும், இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தல் தான்.

இவ்வாறான சூழலில், தான், சீனாவின் குன்மின் நகரில் 19 இந்தியப் பெருங்கடல் நாடுகளுடன் விவாதித்துக் கொண்டிருந்த போது, இந்தியாவின் றோ தலைவர் கொழும்பு வந்திருந்தார் எனக் கூறப்படுகிறது.

அவரது பயணம் குறித்த கேள்விக்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன, ஜனாதிபதியை அவர் சந்தித்தாரா என்று தனக்குத் தெரியாது என்றும் அவ்வாறு சந்திப்பு நடந்திருந்தால் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் அதுபற்றி வெளிப்படுத்துவார் என்றும் கூறியிருக்கிறார்.

றோ தலைவரின் இலங்கைப் பயணம் குறித்த செய்தியை அரசாங்கம் இது வரை மறுக்கவில்லை. அவர் ஜனாதிபதியை சந்தித்தது வேண்டுமானால் அதிகாரபூர்வ நோக்கங்களைக் கொண்டதாக இருக்கலாம். அவ்வாறாயின் அவர் பசில் ராஜபக்ஷவை சந்தித்ததாக கூறப்படுகின்ற நிலையில் இந்தச் சந்திப்பு ஏன் நிகழ்ந்தது என்ற கேள்வி பலருக்கு குடைச்சலாக இருக்கிறது.

சீனாவுடனான நெருக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கம் கொண்டதா? பஷிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதால் மஹிந்தவை ஒரு தலைவராக இந்தியா கருதவில்லையா என்ற பல கேள்விகளும் எழுந்துள்ளன.

நிகழுகின்ற சம்பவங்களை வைத்துப் பார்த்தால், இலங்கை அரசியல், சீன–இந்திய அதிகாரப் போட்டியையும் தாண்டி பூகோள அரசியல் போட்டிகளால் தீர்மானிக்கப்படுகின்ற நிலை ஏற்கனவே உருவாகி விட்டதாகவே தெரிகிறது.

# ஸ்கொட்லாந்தும் சுயநிர்ணய உரிமையும்


(20ம் பக்கத் தொடர்ச்சி) அடிப்படையில் ஐக்கிய இராச்சிய சட்டங்களின் அடிப்படையில் தீர்மானிப்பது எந்தளவு தார்மீகமானது? இங்கு சட்டத்துக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து, ஒரு தேசத்தின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை நிராகரிப்பது நியாயமாக மாட்டாது.

அந்தச் சட்டம் மக்களின் இறையாண்மையை மன்னராட்சிக்கு தலைவணங்கும் பாராளுமன்றத்துக்கு வழங்குமாயின், அந்தக் கட்டமைப்புக்குள் சமூக நீதியை எதிர்பார்க்க முடியாது. சுயநிர்ணய உரிமையின் அடித்தளமான சுயகௌரவம் இத்தகைய கட்டமைப்புக்குள் அடகு வைப்பதாக ஸ்கொட்லாந்து மக்கள் கருதத் தொடங்கினால், அவர்கள் தமது அவாவை நிறைவேற்றிக்கொள்வதற்காக கட்டமைப்பை தகர்க்கும் மாற்று வழிகளை நாடலாம். நன்றி:- வீரகேசரி


# தமிழ்க்கட்சிகள் இந்திய மத்தியஸ்தத்தைக் கோர வேண்டும்


(19ம் பக்கத் தொடர்ச்சி) விடயங்களை அணுகுவது புத்திசாலித்தனமல்ல. இந்த சந்தர்பத்தில், தமிழ்கட்சிகளின் தலைவர்கள் இந்தியாவின் மத்தியஸ்தத்தை ஒருமித்து கோரவேண்டும். ஏற்கனவே இந்திய பிரதமரின் தலையீட்டை கோரி, கடிதம் அனுப்பியிருக்கும் கட்சிகள், இந்தவிடயத்தில் தடுமாற வேண்டியதில்லை. அந்தக் கடிதத்தில் கோரியது உண்மையாயின், இப்போது குறித்த ஆறு கட்சிகளும் கருத்தொருமித்து, இந்தியாவின் மத்தியஸ்தத்திற்கான அழைப்பை முன்வைக்க வேண்டும். ஆனால் மத்தியஸ்தத்தின் அடிப்படையாக இந்திய–இலங்கை ஒப்பந்தமே இருக்க வேண்டும். முன்னர் சம்பந்தன்–சுமந்திரன் செய்த தவறையே மீளவும் செய்தால், செய்ய அனுமதித்தால், மீளவும் சமஸ்டியுமில்லை, தீர்வுமில்லையென்னும் நிலைமையே ஏற்படும். அப்படியொரு நிலைமை தான் தொடர்ந்தும் ஏற்பட வேண்டுமென்று, தமிழ் கட்சிகளின் தலைவர்கள் விரும்பினால், செல்வநாயகம் கூறியது போன்று தமிழர்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும். தமிழர்கள் என்பதால், ஏழை மக்கள் தொடர்பிலேயே இந்தக் கட்டுரை குறிப்பிடுகின்றது. கட்சிகளின் தலைவர்களுக்கு எந்த பிரச்சினையுமில்லை ஏனெனில், அவர்களிடம் கோடிகள் உண்டு.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! மங்கள காரியங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். வேலை பளு காரணமாக நேரம்தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். சகோதரங்களோடு சில்லறை சண்டைகள் ஏற்பட்டு சரியாகும். கவுரவம் பாதிக்கும் படியான சூழ்நிலை வரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் சக ஊழியர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நன்மை தரும்.



ரிஷபராசி அன்பர்களே! புதன் சஞ்சாரத்தால் தேவையற்ற மன சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். திடீர் பண தேவை உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது.


மீனராசி அன்பர்களே! தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடை நீங்கி நன்றாக நடந்து முடியும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். கடன் பிரச்சனை கட்டுக்குள் இருக்கும். உத்யோகத்தில் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும். மேலதிகாரிகள் ஒத்துழைப்பும் இருக்கும். வீட்டில் சுபகாரியம் நடக்கும்.


கடகராசி அன்பர்களே! எதையும் திட்டமிட்டு செய்து முடிப்பீர்கள். அதிகம் பேசுவதை தவிர்ப்பது நல்லது. அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப் பற்றி ஆலோசனை செய்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவார்கள். சக ஊழியர்கள், மேலதிகாரிகளால் நன்மை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை அகலும். விடுமுறை நாட்கள் மகிழ்ச்சி தரும்.



சிம்மராசி அன்பர்களே! எதையும் சமாளிக்கும் திறமை உண்டாகும். அடுத்தவர்களது செய்கை உங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தலாம். சொந்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம். சின்ன விஷயங்களால் மன நிறைவை அடைவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும்.



கன்னிராசி அன்பர்களே! அனுபவத்தையும், திறமையையும் கொண்டு காரியங்களை திறம்பட செய்து முடிப்பீர்கள். முதலீடுகளில் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. மனதில் தைரியம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை லாபகரமாக செய்வார்கள். உத்யோகத்தில் அதிக உழைப்பும் அதற்கேற்ற பலனும் உண்டாகும்.



துலாம் ராசி அன்பர்களே! ராசிநாதன் சூரியன் பலத்தால் நல்ல பலன்கள் உண்டாகும். பூர்வீக சொத்துக்களில் இரு ந்த பிரச்னைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம்.தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும். உத்யோகத்தில் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது. எதிர்பாராத இடமாற்றம் உண்டாகலாம். ஐயப்ப வழிபாடு செய்தல் நன்மை தரும்.



விருச்சிகராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற மனக்கவலை உண்டாகும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும். ஐயப்ப பக்தர்கள் விரத காலத்தில் கவனம் செலுத்தவும்.




தனுசுராசி அன்பர்களே! சுணங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் எடுக்கும். ராசிநாதன் புதன் ஏழாமிடத்தில் இருப்பதால் எல்லாவற்றிலும் சாதகமான பலனே கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி ஏற்படும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். லாபம் அதிகரிக்கும்.


மகரராசி அன்பர்களே! குரு பார்வை பெறுவதால் காரியங்கள் நன்றாக நடந்து முடியும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல் உத்யோகத்தில் வேலைபளு, கூடுதல் பொறுப்புகள் உண்டாகலாம். அதிக உழைப்பின் பேரில் வேலைகளை செய்து முடிப்பீர்கள். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும்


கும்பராசி அன்பர்களே! ராசிநாதன் செவ்வாய் சஞ்சாரத்தால் தடைகள் அனைத்தும் நீங்கும். வீண் குற்றச்சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் திறமை உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது.


மீனராசி அன்பர்களே! ராசிநாதன் சுக்கிரன் சாரம் உங்களுக்கு அனுகூலம் தரும். பயணங்கள் மூலம் அலைச்சல் அதிருப்தி உண்டாகலாம். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். தொழில் வியாபாரத்தில் பணத்தேவை ஏற்படலாம். கடன் விவகாரங்களில் கவனமாக செயல்படுவது நல்லது. உத்யோகத்தில் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும். மிகவும் கவனமாக இருப்பது அவசியம்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# புலம் பெயர்ந்த மண்ணில் இருந்து

(18ம் பக்கத் தொடர்ச்சி) 48. மங்கல நிகழ்வுகளில் புதுப்புது சடங்குகளைப் புகுத்தி ஏராளம் ஆடை அணிகலன்களை வாங்கிப் பணத்தை வீணாகச் செலவு செய்தல்.

49. ஊருப்பட்ட விரதங்கள் வாழ்வில் புகுந்து செத்த வீட்டுச் செலவுச் சாப்பாடு உண்ண ஆள்கள் அற்ற நிலை.

50. உள்ளூரில் உழைத்து எவ்வளவு தான் பணம் தேடினாலும் வெளிநாட்டிலுள்ளோர் குடும்பங்களை மட்டும் லெவலாகப் பார்த்தல்.

51. பொது நிகழ்வுகளில் காசு தரும் வெளிநாட்டவரைக் கனம் பண்ணி உள்ளூரவர்களை மதிப்புக் குறைவாகப் பார்ப்போரும் உண்டு.

52. எல்லாப் பிள்ளைகளும் வெளிநாட்டில். உள்நாட்டில் தாய் தந்தையரைப் பார்க்க ஒழுங்கான ஆள்கள் இல்லை.

53. பென்னாம் பெரிய வாசிகசாலைகளும் பல பேப்பர்களும் உண்டு. ஆனால் வாசிக்க ஆள்கள் குறைவு.

54. ஐபோன்,லப்ரொப்,ரப் போன்றவற்றை அன்பளிப்பாகப் பெற்ற சிலர் பொழுது போக்கு அம்சங்களில் மூழ்கிக் கல்வியில் சீரழிந்தமை.

55. காசு இல்லாததால் தாம் படிக்க முடியவில்லையே என ஏராளம் காசை உழைத்து இங்கு அனுப்பினார்கள். காசு அதிகம் வந்த போது ஆடம்பரங்களில் ஆட்பட்டுப் படிக்காமல் விட்டோரும் உண்டு.

56. வீட்டில் சமைப்பதை மறந்து கடைகளில் சாப்பாடு எடுத்து உண்ணும் சோம்பேறிகளும் உண்டு.

57. உள்ளூரில் அடிக்கடி மின்னொளியில் விளையாட்டுச் சுற்றுப் போட்டிகளை நடத்திக் மாணவர்களின் கல்வியைச் சீரழித்தல்.

இதில் இல்லாத பலது இன்னும் இருக்கலாம். இருந்தால் கூறுங்கள் நண்பர்களே.

நன்றி– வேதநாயகம் தபேந்திரன் முகநூலில் இருந்து

# பாட்டும் நானே? பாவமும் நானே!



கேள்வி:–திருவள்ளுவர், பாரதி படங்களில் இருந்த திருநீற்றையும், பொட்டையும் நீக்கியதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் :–அது அறியாமையின் வெளிப்பாடு! இந்துசமய வெறுப்பின் காரணமாக, உயர் புலவர்களின் சமய அடையாளங்களை நீக்க முற்படுவது தவறு! அது தேவையற்றதும்கூட. அப் புலவர்கள் சமயப் பொதுமை கண்டவர்களே தவிர, சமயச் சார்பில்லாதவர்கள் அல்லர். மேற்சொன்ன இரண்டு புலவர்களும் இந்து மதத்தைச் சார்ந்து நின்றவர்கள் என்பதில் எவருக்கும் ஐயமிருக்க நியாயமில்லை.

உயர் கருத்துக்களைச் சொன்ன, இவர்களுக்கான சமய அடையாளங்களை நீக்கினால் தான் அவர்களின் கருத்து பன்முகப்பட்டுப் பலரிடம் சேரும் என்று சிலர் வாதிடுகின்றனர். இதே காரியத்தை வேற்றுச் சமயங்களில் இவர்களால் செய்ய முடியுமா? எல்லோருக்கும் பயன் செய்யக்கூடியவை என்பதற்காக கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்தமத அடையாளங்களை நீக்கி, பைபிளையும், குரானையும், திரிபீடகத்தையும் வெளியிட முடியுமா?

வள்ளுவர், தான் இந்துமதத்தைச் சார்ந்தவர் என்பதை, பல இடங்களில் பதிவு செய்திருக்கிறார். 'அழுக்காறாமை' எனும் அதிகாரத்தில் 'செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்' என்றும், 'ஆள்வினைஉடைமை' எனும் அதிகாரத்தில் 'மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான் தாளுளாள் தாமரையினாள்' என்றும், லஷ்மி, மூதேவி ஆகிய இந்துத் தெய்வங்களைத் தெளிவாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். 'நீத்தார் பெருமை' அதிகாரத்தில் 'இந்திரனேசாலும் கரி' என்று இந்துமதம் சொல்லும் தேவர்களின் தலைவன் இந்திரனைக் குறிப்பிடுகிறார். 'புணர்ச்சிமகிழ்தல்' அதிகாரத்தில் 'தாமரைக் கண்ணான் உலகு' என்று திருமாலைத் தெளிவுபடச் சுட்டுகிறார். இதை விட அவர் பேசும் ஊழ், மறுபிறப்பு, தென்புலத்தார் போன்ற கருத்துக்களும் இந்துமதத்திற்கே உரித்தானவை என்பது வெளிப்படை. இப்படியாய் வள்ளுவர், தன் மதத்தை மிகத் தெளிவாக அடையாளம் காட்டியிருக்க, இந்துமத அடையாளங்கள் நீக்கி அவரைக் காட்டுவது எவ்விதத்திலும் நியாயமாகாது.

வள்ளுவரை விட்டுத் தள்ளுங்கள். காலத்தால் நம் அருகில் வாழ்ந்த பாரதியார் அந்தணர், இந்து மதத்தைச் சார்ந்தவர், இந்துமதக் கடவுள்களில் எல்லையற்ற பக்தி வைத்திருந்தவர் என்பதெல்லாம் 'உள்ளங்கை நெல்லிக்கனி'யான விடயங்கள். விநாயகரைப் பற்றியும், முருகனைப் பற்றியும், காளியைப் பற்றியும், சக்தியைப் பற்றியும், கண்ணனைப் பற்றியும் அவர் பாடியிருக்கும் பாடல்கள், அவரை இந்துமத ஆச்சாரியர்களில் ஒருவராகவே காட்டுகிறது. அப்படியிருக்க அவரின் 'நெற்றிப் பொட்டில் கைவைக்க' எவருக்கும் உரிமை இல்லை என்பது ஆணித்தரமான விடயம். அதிகாரம் கையில் இருக்கிறது என்பதற்காக வரலாற்றை மறைக்க நினைப்பது பெருந் தவறு.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
"சங்கீத சங்கமம் 2023"
தொடர்புகளுக்கு 416 841 9600

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• RESP
• Disability
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.